இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 - முரசு: 82 - ஒலி: 66 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - புரட்டாசி 28 - ஞாயிற்றுக்கிழமை 15 அக்டோபர் 2023 - திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 66: Thiruvalluvar Year - 2054 - Purattasi 28 - Sunday 15 October 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## திராவிட இயக்க எண்ணத்தால் உருவானவர்! பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் பேரன்பைப் பெற்றவர்! வருங்காலச் சமுதாயத்திலும்

# ஆற்றல் மிக்க ஆசைத்தம்பிகள் உருவாகவே இதுபோன்ற விழா!

## வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழாவில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூத்த முன்னோடி வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவரது திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், வாலிபப் பெரியார் ஆசைத்தம்பி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை, அக்.15-

**சென்னையில் நடைபெற்ற ‘வாலிபப் பெரியார்’ ஏ.வி.பி. ஆசைத் தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் திராவிட இயக்க எண்ணத்தால் உருவானவர் என்றும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் பேரன்பைப் பெற்றவர் என்றும் வருங்கால சமுதாயத்திலும் ஆற்றல் மிக்க ஆசைத் தம்பிகள் உருவாகவே இதுபோன்ற விழா பயன்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூத்த முன்னோடி வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

‘வாலிபப் பெரியார்’ என்று போற்றப்படும் ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகக் குறுகிய காலத்தில் எழுச்சியுடனும், ஏற்றத்துடனும் இதை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு முதலில் தலைமைக் கழகத்தின் சார்பில் என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நூற்றாண்டு விழாவை, ஒரு நிகழ்ச்சியாக மட்டும் நடத்தாமல், புகைப்படக் கண்காட்சியையும், அடுத்து ஆசைத்தம்பி அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்து ஒரு சிறு ஆவணப்படத்தையும் தயாரித்து வழங்கக்கூடிய ஒரு பன்முக விழாவாக இதை நடத்திக் கொண்டிருக்கிறார்.

எதற்காக கழக முன்னோடிகளைப் போற்றும் இத்தகைய விழாக்களை நடத்துகிறோம்? என்றால், அண்ணன் துரைமுருகன் அவர்கள் எடுத்துச் சொன்னது போல, அவர்களது புகழைப் பரப்புவதற்காக மட்டுமா நடத்துகிறோம்? இல்லை... வரக்கூடிய காலக்கட்டத்தில் வருங்கால சமுதாயத்திலும் ஆற்றல்மிக்க ஆசைத்தம்பிகள் உருவாக வேண்டும் என்பதற்காகத்தான் இது போன்ற விழாக்களை நடத்துகிறோம்!

‘ஒருகாலம் வரும்... சட்டமன்ற உறுப்பினராக ஆவோம்; நாடாளுமன்ற உறுப்பினராக ஆவோம்...’ என்றெல்லாம் யாரும் கணக்குப் போடாத காலத்தில், திராவிட இயக்கத் தூணாக தன்னை ஒப்படைத்துக் கொண்டவர் நம்முடைய ஆசைத் தம்பி அவர்கள்.

நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் சம காலத்தவரான அண்ணன் ஆசைத்தம்பி அவர்கள், தலைவர் கலைஞரைவிட ஐந்து மாதம் இளையவர்.

1938ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களை, இந்தி எதிர்ப்புப் போராட்டம் திருவாரூர் வீதியில் தமிழ்க் கொடி தாங்கி போராட வைத்தது. அதே ஆண்டில் திராவிட இயக்க எண்ணத்தால் தீவிரமாக உருவானவர் தான் நம்முடைய ஆசைத்தம்பி அவர்கள். அவருடைய தந்தையார் பழனியப்பன் அவர்கள், விருதுநகர் மாவட்டத்தில் நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்தவர்.

விருதுநகர் என்பதே நீதிக்கட்சியின் கோட்டையாக இருந்த நகரம்! அங்கிருந்து உருவானவர்தான் நம்முடைய ஆசைதம்பி அவர்கள். பள்ளிப்பருவ காலத்திலேயே திராவிட இயக்க மாணவர்களை இணைத்து சங்கம் தொடங்கி பல்வேறு அமைப்புகளைத் உருவாக்கி, மேடைகளில் சொற்பொழிவாற்றத் தொடங்கினார்.

### அண்ணா – கலைஞர் போல் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவர் ஆசைத் தம்பி!

- பேரறிஞர் அண்ணா நடத்திய திராவிட நாடு
- சி.பா. ஆதித்தனார் நடத்திய தமிழன் போன்ற இதழ்களில் இளமைக் காலத்திலேயே எழுதத் தொடங்கினார். அதைத் தொடர்ந்து பிற்காலத்தில் ‘தனி அரசு’ என்ற இதழை அவர் நடத்தினார். முதலில் வார இதழாக வெளிவந்து கொண்டிருந்தாலும், அதற்கு பிறகு சில ஆண்டுகள் நாளிதழாகவும் வந்திருக்கிறது. ‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் தினத்தந்தி’ என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பட்டது ஆசைத்தம்பியின் தனியரசு நாளிதழ்.

பேரறிஞர் அண்ணா - தலைவர் கலைஞரைப் போல ஏராளமான கதைகள் - நாவல்கள் எழுதியிருக்கிறார். நாற்பதுக்கும் மேற்பட்ட கதை நூல்கள் எழுதி இருக்கிறார். கதைகளில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தியவர் அவர்.

> “ஒற்றை மொழி – ஒற்றை மத நாடாக மாற்றிவிடாதீர்கள்” என்று எச்சரிக்கை செய்தார். அவரது நாடாளுமன்ற உரைகளில் இன்னொன்றையும் வலியுறுத்தி இருக்கிறார். “தமிழ்நாடு இந்தளவுக்கு விழிப்புணர்வு பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணம், பெரியார் இயக்கம்! எனவே, வெவ்வேறு மாநிலங்களில் இருந்து வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், உங்கள் மாநிலங்களில் பெரியார் இயக்கத்தை உடனே தொடங்குங்கள்!” என்றும் ஆசைத்தம்பி அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் திரைக் கதை - வசனம் எழுதிய ’பராசக்தி’ திரைப்படம் எத்தகைய தாக்கத்தை நமது தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்படுத்தியதோ அதை அனைவரும் தெளிவாக அறிந்திருக்கக் கூடியவர்கள். அந்த பராசக்தி கதையில் வரும் பாத்திரங்களை வைத்தே ‘கசந்த கரும்பு’ என்ற கதையை எழுதியவர் ஆசைத்தம்பி அவர்கள்.

- திராவிடர்கள்
- திராவிடர் இயக்கம் ஏன்?
- தனியரசு ஏன்?
- காந்தியார் சாந்தியடைய... போன்ற பல்வேறு கட்டுரைகளை அவர் அந்தக் காலக்கட்டத்தில் எழுதி திராவிட இயக்கத்தவர்களுக்கு உணர்வூட்டிய படைப்புக்களை படைத்திருக்கிறார்! அதிலும் குறிப்பாக ‘காந்தியார் சாந்தியடைய’ என்ற புத்தகம் மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

கோட்சே என்ற கொடியவனை மனதில் வைத்து

எழுதப்பட்ட ‘காந்தியார் சாந்தியடைய’ நூல்!

அண்ணல் காந்தியடிகள் கொலை செய்யப்பட்ட வேதனையில் எழுதப்பட்ட மிகச் சிறிய புத்தகம் அது. கோட்சே என்ற கொடியவனை மனதில் இருக்கும் மதவாதத்தைக் கண்டித்து அந்த நூல் எழுதப்பட்டது. இந்த புத்தகம் வகுப்புவாதத்தை ஏற்படுத்துகிறது என்று சொல்லி அந்த நூலை அன்றைய அரசு தடை செய்தது.

ஆசைத்தம்பியை கைது செய்து சிறையில் அடைத்தார்கள். ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையும் - 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த செய்தியைக் கேள்விப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், அன்றைய தினம் கழகத்தின் அமைப்புக்குழுச் செயலாளராக இருந்த மதிப்பிற்குரிய என்.வி.நடராசன் அவர்களிடம் இந்த வழக்கை கண்காணிக்கும் பொறுப்பை அவரிடத்தில் ஒப்படைத்தார். வழக்கு நடத்துவதற்காக குழுவும் அமைக்கப்பட்டது. இது தொடர்பாக நிதி திரட்டும் பணிகள் ஒரு பக்கம் நடந்து வந்தன. அதில் முதல் ஆளாக 50 ரூபாய் நிதி வழங்கினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

### ஆசைத் தம்பிக்கு சிறையில் நடந்த கொடுமைகள்!

ஆசைத்தம்பிக்கு பிணை கிடைத்தது. ஜாமின் கிடைத்தது. சிறையில் இருந்து அவரை விடுவிப்பதற்கு முன்னதாக அவரை கட்டாயப்படுத்தி அவருக்கு மொட்டை அடித்து, கொடுமைப்படுத்தியது சிறைத் துறை. நிர்வாணம் ஆக்கினார்கள். பின்னர் கட்டிக் கொள்ள கோவணம் தரப்பட்டது. துறையூரைச் சேர்ந்த புத்தக வெளியீட்டாளர்களான தங்கவேல், கலியபெருமாள் ஆகியோருடன் சேர்த்து ஆசைத்தம்பிக்கும் மொட்டை அடிக்கப் பட்டது.

இது கழகத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் அனைவருடைய மனதில் ஒரு வேகத்தை, கோபத்தை, ஆத்திரத்தை உண்டாக்கியது. மொட்டை அடிக்கப்பட்ட இந்த மூவர் படத்தையும் பேரறிஞர் அண்ணா அவர்கள், தனது திராவிட நாடு இதழில் வெளியிட்டார். கண்காட்சியில் இது இடம் பெற்றிருக்கிறது. இதை பார்த்தால் தெரியும். நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று அண்ணா அவர்கள் உத்தரவிட்டார். கோவில்பட்டியில் நடந்த கழக செயற்குழுவில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. திருச்செங்கோட்டில் நடந்த கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் பேசினார், ‘சிறைச்சாலை என்ன செய்யும்?’ என்ற சுந்தராம்பாள் பாட்டை பாடிக் காட்டினார். பாடி விட்டு, சிறைச்சாலை என்ன செய்யும் தெரியுமா? மொட்டை அடிக்கும் என்று முழங்கினார்.

அந்தக் காலத்தில் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் வெளியிட்ட புத்தகங்கள் ஏராளமாக தடை செய்யப்பட்டன. தந்தை பெரியாரின் பொன்மொழிகள் என்ற நூல் தடை செய்யப்பட்டது. பேரறிஞர் அண்ணாவின் ஆரியமாயை தடை செய்யப்பட்டது. புலவர் குழந்தையின் இராவண காவியம் தடை செய்யப்பட்டது. கலைஞரின் நாடகங்கள் - நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் நாடகங்கள் எல்லாம் தடை செய்யப்பட்டன.

அந்த வரிசையில் ஆசைத்தம்பி அவர்களின் ‘காந்தியார் சாந்தியடைய’ என்ற நூலும் தடை செய்யப்பட்டது. கழகத்தைச் சேர்ந்த அனைவர்க்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கட்டளையை பிறப்பித்தார். ‘எந்த புத்தகத்தை தடை செய்கிறார்களோ - அந்த புத்தகத்தை பொது இடத்தில் தெருவிளக்கு கம்பத்தின் கீழ் நின்று கொண்டு கூட்டமாக படியுங்கள்’ என்று அண்ணா கட்டளையிட்டார்.

கூட்டம் கூட்டமாக நமது தொண்டர்கள், அந்த புத்தகங்களைப் படித்தார்கள். இலங்கையில் இந்த புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டார்கள். மலையாளத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். இது இன்னும் நெருக்கடியை ஏற்படுத்தியது. அப்போது, சென்னை வண்ணாரப்பேட்டையில் எஸ்.சி.மணி, பி.மணி, ராஜா ஆகிய மூன்று கழகத் தொண்டர்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டார்கள்.

### காந்தியார் சாந்தியடைய என்ற நூலை விற்றவர்கள் கைது!

பேரறிஞர் அண்ணாவின் ஆரியமாயை நூலையும், ஆசைத்தம்பியின் ‘காந்தியார் சாந்தியடைய’ நூலையும் விற்றார்கள் என்று கைது செய்யப்பட்டார்கள். வண்ணாரப்பேட்டையில் நின்றுகொண்டு அஞ்சாமல் முழக்கம் போட்டுள்ளார்கள் இந்த மூவரும். அத்தகைய வண்ணாரப்பேட்டையை உள்ளடக்கிய வடசென்னைப் பகுதியில்தான் இன்றைய தினம் ஆசைத்தம்பிக்கு நூற்றாண்டு விழாவை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அவருடைய புத்தகம் விற்றதால், 1950 ஆம் ஆண்டு கைது செய்தார்கள். ஆட்சிக்கு வந்து அதே பகுதியில் அவருக்கு நூற்றாண்டு விழாவை இன்றைக்கு நாம் கம்பீரத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இது தான் திராவிட இயக்கத்தின் வெற்றி!

திராவிட இயக்கத் தோழர்களுக்குக் கிடைத்திருக்கும் பெருமை! இத்தகைய அடக்குமுறையைப் பற்றியோ, கைது செய்யப்படுவதைப் பற்றியோ, சிறைச்சாலை சித்திரவதைகள் பற்றியோ ஆசைத்தம்பி எந்தக் காலத்திலும் கவலைப்பட்டவரல்ல!

மிசாவில் எங்களோடு ஓராண்டு காலம் சிறையில் இருந்தார். எண்ணிப் பார்க்கிறேன். அதிலும் குறிப்பாக, சென்னை சிறைச்சாலையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இருந்தார்கள் என்று சொன்னால், அதில் எதற்கும் அஞ்சாமல் ஒரு சிறிதும் கவலைப்படாமல் இருந்த நம்பர்1 கைதி யார் என்று கேட்டால் ஆசைத்தம்பி தான். நான் இப்போதும் சொல்கிறேன், தைரியமாக சொல்கிறேன். எதைப் பற்றியும் கவலைப்படமாட்டார். நாங்கள் எல்லாம் சிறைக்கு புதிது. எங்களைப் போன்றோர் சிறைக்கு புதிது. எங்களுக்கெல்லாம் தைரியம் ஊட்டியவர். சிறை என்றால் என்ன என்பதை எங்களுக்கு கற்றுக்கொடுத்தவர். அவரிடத்தில் பல பேர் சென்று கேட்பார்கள். எப்போது விடுவிப்பார்கள்? கவலைப்படாதீர்கள், 1 year, 1 year என்று சொல்வார். அவ்வளவு கூலாக சொல்வார். அவரைப்போல ஒரு ஜென்டில்மேனை நான் இதுவரைக்கும் பார்த்ததில்லை. எதைப் பற்றியும் கவலைப் படமாட்டார்.

கணக்குப் போட்டு பார்த்தேன், மொத்தம் 24 முறை, இனம் - மொழி - நாடு காக்கப்போராடி சிறை சென்றவர் நம்முடைய ஆசைத்தம்பி அவர்கள்.


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்




இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 15-10-2023

# பந்தாடும் பா.ஜ.க.வின் யோக்கியதை!

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல்களை அம்பலப்படுத்திய இந்திய தணிக்கைத்துறையின் மூன்று உயர் அதிகாரிகளைப் பந்தாடியுள்ளது ஒன்றிய அரசு. இதன்மூலமாக அவர்களது யோக்கியதை கிழிந்து தொங்குகிறது!**

பாரத்மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாதைக் கட்டுமானத் திட்டம், சுங்கச் சாவடிக் கட்டணங்கள், ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புர அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம், எச்.ஏ.எல். விமான வடிவமைப்புத் திட்டம் ஆகிய ஏழு திட்டங்கள் குறித்து சி.ஏ.ஜி. அறிக்கை வெளியானது. ஊழல்களை அம்பலப்படுத்திய இந்திய கணக்குத் தணிக்கைத் துறையின் மூன்று முக்கிய அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தணிக்கை உள்கட்டமைப்பின் முதன்மை இயக்குநர் அதூர்வ சின்ஹா, தணிக்கைத்துறை பதிவாளர் தத்தபிரசாத் சூர்யகாந்த் ஷிர்சாத் மற்றும் அசோக் சின்ஹா ஆகியோரை ஒன்றிய அரசு பணியிடமாற்றம் செய்துள்ளது. இவர்கள் மூன்று பேரும் வெவ்வேறு துறைகளுக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதூர்வ சின்ஹா, இப்போது இருக்கும் பொறுப்புக்கு கடந்த மார்ச் மாதம்தான் வந்திருக்கிறார். அவரை கேரள மாநில கணக்காளர் ஜெனரலாக தூக்கி அடித்திருக்கிறார்கள். சூர்யகாந்த், இயக்குநர் - சட்டம் என்ற பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளார். வடக்கு மத்திய மண்டல இயக்குநராக அசோக் சின்ஹா, இயக்குநர் - தேசிய மொழிகள் துறைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர்கள் மூவரும்தான் முன்பு வெளியான தணிக்கைத் துறை அறிக்கையைத் தயார் செய்தவர்கள் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஒன்றிய அரசுத் துறை அலுவலர்கள் சொல்லி வருகிறார்கள்.

மழைக்காலக் கூட்டத் தொடரின் இறுதி நாளான ஆகஸ்ட் 12 அன்று இந்த அறிக்கைகள் வெளியாகின. செப்டம்பர் 12-ல் இவர்கள் மூன்று பேரும் தூக்கியடிக்கப்பட்டு விட்டார்கள்.

“ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல்களை அம்பலப்படுத்திய இந்திய தணிக்கைத்துறை அதிகாரிகளை மிரட்டும் வகையில், ஒன்றிய அரசு அவர்களை பணியிட மாற்றம் செய்துள்ளது” என்று காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

**இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், “மோடி அரசின் ஊழல்களை அம்பலப்படுத்தும் எவரையும் மிரட்டி அச்சுறுத்துதல் அல்லது அவர்களை பதவியில் இருந்தே நீக்குதல் என்பதே பா.ஜ.க.வின் தொடர் நடவடிக்கையாக உள்ளது. சி.ஏ.ஜி. அதிகாரிகளின் இடமாற்ற உத்தரவு உடனடியாக ரத்து செய்யப்பட்டு, துவாரகா விரைவுச் சாலை, பாரத்மாலா, ஆயுஷ்மான் பாரத் திட்டங்கள் தொடர்பான, மெகா ஊழல்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பா.ஜ.க. அரசின் ஊழல்களை யாரேனும் வெளிக்கொண்டு வந்தால் அவர்களை அச்சுறுத்தும் மாஃபியா போன்று, மோடி அரசு செயல்பட்டு வருவதாகவும், இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு 3 தணிக்கை அதிகாரிகளின் இடமாற்றம்” என்று ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.**

தணிக்கைத் துறை அறிக்கையில் சொல்லப்பட்டவை சாதாரண குற்றச்சாட்டுகள் அல்ல.

★ ஆயுஸ்மான் பாரத் திட்டத்தில் 7.5 லட்சம் பயனாளிகள் ஒரே செல்போன் மூலமாக இணைக்கப்பட்டுள்ளார்கள். இறந்தவர்களுக்கு சிகிச்சை கொடுத்ததாக கணக்கு உள்ளது. இறந்த பிறகு 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. சுமார் 22 கோடியே 44 லட்சம் ரூபாயை தகுதியில்லாதவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

★ துவாரகா விரைவு நெடுஞ்சாலைத் திட்டத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடியாக இருந்த செலவு 250 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பை விட 278 மடங்கு கூடுதல் செலவு செய்யப்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கை சொல்கிறது.

★ அயோத்தியில் ராமாயணம் தொடர்புடைய இடங்களை நவீனப்படுத்த ஒரு திட்டம் போட்டுள்ளார்கள். இந்தத் திட்டத்தில் ஒப்பந்தகாரர்களுக்கு விதிமுறைகளை மீறி தேவையற்ற சலுகைகள் தரப்பட்டுள்ளது.

★ பாரத்மாலா திட்டத்தின் படி ஒரு கிலோ மீட்டர் தொலைவு நெடுஞ்சாலை அமைக்க 15.37 கோடி செலவு செய்ய வேண்டும். ஆனால் இரண்டு மடங்கு அதிகமாக நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ **நாடு முழுவதும் சுமார் 600 சுங்கச்சாவடிகள் உள்ளன. 5 சுங்கச்சாவடிகளை மட்டும் தணிக்கை செய்ததில், விதிகளுக்குப் புறம்பாக வாகன ஓட்டிகளிடம் இருந்து 132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வசூலித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள பரனூர் சாவடியில் 6 கோடியே 54 லட்சம் ரூபாய், பொதுமக்களிடமிருந்து முறைகேடாக வசூலிக்கப்பட்டுள்ளது.**

★ **இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் விமான எந்திரம் வடிவமைப்பில் 159 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.**

- ஆகிய ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தி இருந்தது. பா.ஜ.க. அரசின் ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியதை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வந்தார். ‘ஒன்றிய அரசு ஏன் வாயைத் திறக்கவில்லை, பிரதமர் பதில் என்ன?’ என்று ‘இந்தியா கூட்டணிக் கட்சிகள் கேள்விகள் எழுப்பின. அதற்கு பா.ஜ.க. பதிலளிக்கவில்லை..

ஆமாம்! ஊழல் நடந்திருக்கிறது என்பதை இந்த மூன்று அதிகாரிகள் இடமாற்றம் மூலமாக பா.ஜ.க. ஒப்புக் கொண்டுவிட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.10.2023) சென்னையில், புதுச்சேரி காங்கிரஸ் கட்சித் தலைவராக புதிதாக பொறுப்பேற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வெ.வைத்தியலிங்கம்,, புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் வி.நாராயணசாமி ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் புதுச்சேரி காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் சனிக்கிழமை மாலை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி உள்ளிட்ட பல்வேறு அகில இந்திய தலைவர்கள் கலந்து கொள்ளும் மகளிர் உரிமை மாநாட்டிற்காக நடைபெற்று வரும் பணிகளைப் பார்வையிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக மகளிரணிச் செயலாளரும் நாடாளுமன்றக் கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.

### நிலக்கரி இறக்குமதியில் 1000 கோடி மெகா ஊழல்!

# இந்தியாவில் மின் கட்டணம் உயர அதானி நிறுவனமே காரணம்!

## இங்கிலாந்தில் வெளியாகும் ‘பைனான்சியல் டைம்ஸ்’ கட்டுரை!

*சென்னை, அக். 15- இந்தோனேசியாவில் இருந்து இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் அதானி நிறுவனம் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் செய்துள்ளது அம்பலமாகியுள்ளது.*

*நிலக்கரி இறக்குமதியில் அதானி நிறுவனம் செய்த மெகா ஊழலே, இந்தியாவில் மின் கட்டணம் உயர காரணம் என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.*

*இங்கிலாந்தின் பைனான்சியல் டைம்ஸ் வெளியிட்ட ஆய்வு கட்டுரையில், இந்தோனேசியாவில் இருந்து குறைந்த விலைக்கு நிலக்கரி வாங்கும் அதானி நிறுவனம், அதனை தனது குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்திற்கு கொண்டு வந்ததும், 52 சதவிகித லாபத்திற்கு விற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*2019 ஜனவரியில் இந்தோனேசியாவில் 74 ஆயிரத்து 820 டன் நிலக்கரியை, 16 கோடி ரூபாய்க்கு வாங்கிய அதானி நிறுவனம், இந்தியா கொண்டு வந்ததும், 2 மடங்கு உயர்த்தி, 35 கோடி ரூபாயாக விலை அதிகரித்து அரசுக்கு விற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம், ஆண்டுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் லாபம் பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*தைவானில் ஹை லிங் கோஸ், துபாயில் டாரஸ், சிங்கப்பூரில் பான் ஆசியா டிரேட்லிங் எனும் போலி நிறுவனங்கள் மூலம் நிலக்கரியை இறக்குமதி செய்து கொள்ளை லாபம் பார்க்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. நிலக்கரி இறக்குமதியில் அதானி நிறுவனம் செய்த இத்தகைய மோசடிகளால் இந்தியாவில் மின் கட்டணம் உயர வழிவகுத்துள்ளதாகவும் இதன் பாதிப்பு நாட்டின் ஒவ்வொரு சாமானிய மக்களின் தலையிலும் விழுந்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.*

*அதானி நிலக்கரி ஊழல் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பிய நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் அழுத்தத்தால் இந்த விசாரணையை புலனாய்வு அமைப்புகள் மூடி மறைத்ததாக பைனான்சியல் டைம்ஸ் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**காங்கிரஸ் குற்றச்சாட்டு!**

*நிலக்கரி இறக்குமதி மோசடியில் கடந்த 2 ஆண்டுகளில் அதானி நிறுவனம் 12 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கொள்ளை லாபமடைந்ததாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.*

*நிலக்கரி இறக்குமதியில் அதானி நிறுவனம் மோசடி செய்ததாக ஃபைனான்சியல் டைம்ஸ் வெளியிட்ட கட்டுரையை சுட்டிக் காட்டி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அதானி நிறுவனங்களின் மோசடிகளை மூடிமறைக்க ஒன்றிய அரசு என்னதான் முயன்றாலும், மோடியின் பணக்கார நண்பரின் ஊழல்கள் ஒவ்வொரு நாளும் அம்பலப்பட்டு வருவதை தடுக்க முடியாது என்று கூறியுள்ளார்.*

*குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியை, 52 சதவிகிதம் விலை உயர்த்தி, அதானி நிறுவனம் விற்பனை செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ள அவர், இதன் மூலம் 2 ஆண்டுகளில் 12 ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை லாபம் பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.*

*இந்த மெகா ஊழலில் இடைத்தரகர்களாக செயல்பட்டவர்கள் யார்? என்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.*





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூத்த முன்னோடி வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவரது திருவுருவப்படத்தை திறந்து வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். இவ்விழாவில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், வாலிபப் பெரியார் ஆசைத்தம்பி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூத்த முன்னோடி வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவரது வாழ்க்கை வரலாற்றை பற்றிய புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தயாநிதிமாறன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், வாலிபப் பெரியார் ஆசைத்தம்பி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இனம் - மொழி காக்க 24 முறை சிறை சென்றவர் ஆசைத் தம்பி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

எப்போதுமே தனது மனதில் பட்டதை அப்படியே யாருக்கும் பயப்படாமல், வெளிப்படையாக எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் பேசுபவர்தான் ஆசைத்தம்பி அவர்களுக்கு உண்டு.

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், அன்றைய நீதிக்கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகள் சரியாக இல்லை என்பதையும் மேடைகளில் பேசி இருக்கிறார். பேரறிஞர் அண்ணாவின் ‘திராவிட நாடு’ இதழில் ‘ஜஸ்டிஸ் கட்சிக்கு புதிய அமைப்பு வேண்டும்’ என்று 1943ஆம் ஆண்டு கட்டுரை தீட்டியவரும் ஆசைத்தம்பி அவர்கள். இதை வைத்துப் பார்த்தால் ‘திராவிடர் கழகம்’ என்ற அமைப்பை உருவாக்குவதற்கான அடித்தளம் அமைத்தவரே ஆசைத்தம்பி அவர்கள்தான் என்றுகூட சொல்லலாம். அங்கே அண்ணன் திருநாவுக்கரசு உட்கார்ந்திருக்கிறார். நம்முடைய திராவிட இயக்கத்தின் எடுத்தாளர். முரசொலியில் இரண்டு நாட்களாக ஆசைத் தம்பி அவர்களைப் பற்றி தொடர் கட்டுரையை எழுதியிருக்கிறார். அதில் எல்லாம் இடம் பெற்றிருக்கிறது. 1949ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியபோது, தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பு வகித்த கழகப் பிரச்சாரக் குழுவில் உறுப்பினராக ஆசைத்தம்பி அவர்களும் இடம் பெற்றார்கள்.

விருதுநகர் நகர்மன்ற உறுப்பினராக தனது மக்கள் பணியைத் தொடங்கினார். கழகம் முதன்முதலாகப் தேர்தல் களத்தில் நின்றபோது

1957ஆம் ஆண்டு நின்றபோது சட்டமன்றத் தேர்தலில் நாம் 15 தொகுதிகளை வென்றோம். அந்த 15 பேரில் ஒருவர்தான் ஆசைத் தம்பி.

ஆயிரம் விளக்கு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆயிரம் விளக்கில் பின்னாளில் நான் சட்டமன்ற உறுப்பினராக வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன், அதுதான் எனக்கு பெருமை.

1967ல் தேர்தலில் எழும்பூர் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். இதில் என்ன சிறப்பு என்றால், இரண்டு தேர்தலிலும் அந்தக் காலத்தில் செல்வாக்காக இருந்த இரண்டு அமைச்சர்களை தோற்கடித்தவர் ஆசைத்தம்பி அவர்கள். ஆயிரம் விளக்கு தொகுதியில் வேட்பாளராக நின்ற அன்றைய அறநிலையத்துறை அமைச்சர் வெங்கடசாமி போட்டியிட்டார். அவரை ஆசைத்தம்பி தோற்கடித்தார். அதே போல் எழும்பூர் தொகுதியில், அன்றைய அமைச்சர் ஜோதி வெங்கடாசலம் அவரை எதிர்த்து நின்று அவரையும் தோற்கடித்தார்.

அதற்கு பிறகு 1977ல் நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் ஒரே ஒருவர் தான், ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு, ஆசைத் தம்பி வடசென்னையிலிருந்து வெற்றி பெற்றார்.

கழகத்தில் ஒரு எம்.பி. என்பது 100 எம்.பிக்கு சமம் என்பதை அப்போதே நிரூபித்தார் அப்போது கலைஞர் அவர்கள் கேட்கிறார், ஏன் இப்படி பிரிந்து பிரிந்து நிற்கிறீர்கள் என்று ஆசிரியர் வீரமணி அவர்களிடம் கேட்டுள்ளார். “ஜெயிலர்தான் நிற்கச் சொன்னார்” என்று ஆசிரியர் சொல்லியிருக்கிறார். “ஆசைத்தம்பி எங்கே நிற்கிறார்?” என்று தலைவர் கலைஞர் கேட்டிருக்கிறார்... திராவிடர் கழக வரிசையில் நின்று கையை தூக்கி இங்கே இருக்கிறேன் என்று ஆசைத்தம்பி சொல்கிறார்.

அந்தளவுக்கு பெரியார்வாதியாக இருந்ததால்தான், அவர் இன்றைக்கு ‘வாலிப பெரியார்’

### கொள்கை-செயல்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்! திராவிட இயக்கத் தூணாக தன்னை ஒப்படைத்துக் கொண்ட ஆசைத்தம்பி!

என்று அவர் அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆசைத்தம்பி அவர்களின் திருமணத்தை தந்தை பெரியார் அவர்கள் நடத்தி வைத்தார். அவரது மகள் காந்தி திருமணத்தையும் தந்தை பெரியார்தான் நடத்தி வைத்தார். மகன் சௌந்தரபாண்டியன் திருமணத்தை தலைவர் கலைஞர் அவர்கள் நடத்தி வைத்தார்.

திராவிடக் கோட்டையின் தலைமைத் தளபதியாக இருந்தவர் அவர். அத்தகைய அண்ணன் ஆசைத்தம்பி அவர்கள். அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தார்.

நாடாளுமன்றத்தில் இறுதி உரையாற்றும் போது, கடைசியாக, நிறைவாக உரையாற்றும்போது, “இந்தியாவை ஒற்றைத்தன்மை கொண்ட நாடாக மாற்றிவிடாதீர்கள்” என்று முழங்கியவர் ஆசைத்தம்பி அவர்கள். அப்போதே முழங்கியிருக்கிறார்.

“ஒற்றை மொழி – ஒற்றை மத நாடாக மாற்றிவிடாதீர்கள்” என்று எச்சரிக்கை செய்தார். அவரது நாடாளுமன்ற உரைகளில் இன்னொன்றையும் வலியுறுத்தி இருக்கிறார். “தமிழ்நாடு இந்தளவுக்கு விழிப்புணர்வு பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணம், பெரியார் இயக்கம்! எனவே, வெவ்வேறு மாநிலங்களில் இருந்து வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், உங்கள் மாநிலங்களில் பெரியார் இயக்கத்தை உடனே தொடங்குங்கள்!” என்றும் ஆசைத் தம்பி அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்.

தி.மு.க.வில் இருந்தாலும் தி.கவின் மீது அதிகமான பற்றுக் கொண்டவர் ஆசைத்தம்பி அவர்கள். தி.மு.க. – தி.க. ஆகிய இரண்டு இயக்கங்களும் இணைந்து ஒரு போராட்டத்தை நடத்தி, கைது செய்யப்பட்டு அத்தனை பேரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். காலையில் அனைத்து கைதிகளையும் நிற்க வைப்பார்கள், Superintendent வந்து செக் செய்வார். தி.மு.க.வினர் தனியாகவும் – தி.க.வினர் தனியாகவும் நின்றுள்ளார்கள்.

ஆசைத்தம்பியை நாம் அந்தமானில் இழந்தோம். அந்தமானில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். கழகக் கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது களைப்பாக இருக்கிறது – கண்ணைக் கட்டுவது போல இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். மூளையில் இரத்தக் குழாய் வெடித்து அங்கேயே இறந்தும் போனார். அவரது உடலை அங்கிருந்து எடுத்து வருவதற்கே பெரிய அளவில் போராட்டம் நடந்தது. அவரது உடலைப் பார்த்து தலைவர் கலைஞர் அவர்கள் கதறினார். ஏனென்றால் தனது இறுதி உரையில் அந்தமானில் பேசுகிறபோது, கலைஞர் சார்பில் உங்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றுதான் பேசி இருக்கிறார் ஆசைத்தம்பி.

தனது இறுதி உரையில், ‘திராவிட இயக்கம் துவங்காமல் போயிருந்தால் கேட்பாரற்ற அனாதைகளாக ஆகியிருப்போம்’ என்று சொன்னவர் ஆசைத்தம்பி அவர்கள். இதுதான் அவரது மரண சாசனம்!

அந்தக் கூட்டத்தில், அந்தமானில் இருக்கக்கூடிய கழகத் தோழர்கள் ஆசைத்தம்பியை பலரும் புகழ்ந்து பேசினார்கள். இறுதியாக அவர் சொன்னார்: “இவை எதுவும் எனக்கு கிடைத்த புகழ் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் இருப்பதால் கிடைத்த பெருமை!” என்று சொன்னவர் ஆசைத்தம்பி அவர்கள்.

கழகத்தின் ஒவ்வொரு பொறுப்பாளர்களும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டான சொற்கள் இவை!

ஆசைத்தம்பி பற்றி நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள் சொல்கின்றபோது, “கலைஞரின் நெஞ்சில் வேல்பாய்ந்தால் அந்த வேலை எடுத்து எதிரியின் நெஞ்சிலே பாய்ச்சும் வீரம் கலைஞருக்கு உண்டு. கலைஞரின் முதுகில் யாராவது வேல் பாய்ச்சிவிடக் கூடாது என்பதற்காக, நின்று காத்தவர் நம்முடைய ஆசைத்தம்பி” என்று சொன்னார்.

**ஆசைத் தம்பி மறைந்த போது, கலைஞர் எழுதிய உருக்கமிகு வரிகள்!**

இதுதான் ஒவ்வொரு தொண்டருக்குமான இலக்கணம்! ஆசைத்தம்பி மறைந்தபோது தலைவர் கலைஞர் அவர்கள் உருக்கமாக எழுதினார்கள்... “என் அன்பே! ஆசைத்தம்பி! நீ மறையவில்லை. மறைய மாட்டாய். உன்னையும் உன் உறுதியையும் நாங்கள் மறக்க மாட்டோம்” என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள்!

ஆசைத்தம்பி அவர்களை நாம் மறக்கவில்லை; அவரது உறுதியை மறக்கவும் முடியாது என்பதன் அடையாளமாகத்தான் இந்த நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

‘வாலிபப் பெரியார்’ ஆசைத்தம்பி அவர்களின் புகழ் வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

காலியாக உள்ள எம்.பி.பி.எஸ். இடங்களை

# மாநில ஒதுக்கீட்டுக்கு ஒப்படைத்து சேர்க்கைத் தேதியை நீட்டிப்பீர்!

## ஒன்றிய அரசுக்கு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!

*சென்னை, அக். 15 -*

தமிழ்நாட்டில் காலியாக உள்ள எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். படிப்பிற்கான இடங்களை மாநில அரசிடம் ஒப்படைத்து சேர்க்கைக்கான கால அவகாசத்தை நீட்டிப்பதன் மூலம் காலியான இடங்களை நிரப்ப இயலும் என்று ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சருக்கு மாநில அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம் எழுதியுள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஒன்றிய அரசு சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக்மாண்டவியா அவர்களுக்கு எழுதிய நேர்முக கடிதம் வருமாறு:

ஒன்றிய அரசு 30 செப்டம்பர் 2023க்குள். நடப்பு கல்வியாண்டில் 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான இளங்கலை (MBBS மற்றும் BDS) மருத்துவ சேர்க்கைக்காக, தமிழ்நாடு மருத்துவ ஆலோசனைக் குழு (MCC), சுகாதார சேவைகளின்பொது இயக்குநரகம் (DGHS) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் நான்கு சுற்று கவுன்சிலிங்கை முழுமையாக நிறைவு செய்துள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாநில ஒதுக்கீட்டின் கீழ் உள்ள அனைத்து எம்.பி.பி.எஸ். இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன, மேலும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களும் மாநில அரசால் நிரப்பப் பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இருப்பினும், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள புகழ் பெற்ற அரசு மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த அகில இந்திய ஒதுக்கீட்டின் கீழ் 16 இடங்கள் DGHS இன் MCC இன் கவுன்சிலிங்கின் முடிவில் இன்னும் காலியாக உள்ளது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்.

மேலும், மதுரையில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் 3 இடங்களும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் 50 இடங்களும், தமிழகத்தில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் 17 இடங்களும் (மேலாண்மை ஒதுக்கீடு) காலியாக உள்ளன.

ஒவ்வொரு எம்.பி.பி.எஸ். இடமும் விரும்ப த்தக்கது மற்றும் மதிப்புமிக்க தேசிய வளம் என்பது உங்களுக்குத் தெரியும், மேலும் இந்த இடங்களுக்கு வருவதற்கு லட்சக் கணக்கான மாணவர்கள் காத்திருக்கிறார்கள்.

இந்த இடங்களை மாநில ஒதுக்கீட்டுக்கு ஒப்படைத்து, எம்.பி.பி.எஸ். சேர்க்கைக்கான கடைசி தேதியை தேசிய மருத்துவ ஆணையம் நீட்டித்து, மேலும் கவுன்சிலிங் நடத்த தமிழக அரசுக்கு அனுமதி அளித்தால், இந்த விலைமதிப்பற்ற இடங்களை நிரப்ப முடியும்.

எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். படிப்புகளுக்கான வகுப்புகள் தொடங்கப்பட்டிருந்தாலும், இந்த மாணவர்களுக்கு சிறப்பு அமர்வுகளை நடத்துவதன் மூலம் அவர்களுக்கு இடமளிக்க முடியும். குறிப்பாக மாணவர்களுக்கும் பொதுவாக நாட்டிற்கும் பயனளிக்கும் வகையில் சாதக மானபதிலைப் பெறுவோம் என்று நம்புகிறோம்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# நாமக்கல்லில் பேரறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டி!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. கொடியசைத்து துவக்கி வைத்தார்!

*நாமக்கல், அக்.15 -*

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அண்ணா மிதிவண்டி போட்டி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார். நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு அண்ணா மிதிவண்டி போட்டியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் 13 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கு 15 கி.மீ தூரமும், மாணவியர்களுக்கும் 10 கி.மீ தூரமும், 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு 20 கி.மீ தூரமும், மாணவியர்களுக்கும் 15 கி.மீ தூரமும், 17 வயதிற்குட்பட்டவர்கள் மாணவர்களுக்கு 20 கி.மீ தூரமும், மாணவியர்களுக்கும் 15 கி.மீ தூரமும் என மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனியாக நடைபெற்றது. சுமார் 300க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு முதல் பரிசு ரூ.5,000/ வீதம், இரண்டாம் பரிசு ரூ.3,000/வீதம், மூன்றாம் பரிசு ரூ.2,000/வீதமும், மேலும், 4 முதல் 10 இடங்களுக்கு ரூ.250/ வீதம் என மொத்தம் 60 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.67,500/ மதிப்பிலான பரிசுத்தொகைகளை நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, நகர்மன்ற உறுப்பினர் அ.சிவக்குமார், முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.கோகிலா, மாணவ, மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அண்ணா மிதிவண்டி போட்டி நடைபெற்றது. போட்டியை நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் அண்ணா மிதிவண்டி போட்டியை கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுத்தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, நகர்மன்ற உறுப்பினர் அ.சிவக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

சேலம் கிழக்கு மாவட்டம்

# கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் கிழக்கு மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், தம்மம்பட்டி பேரூர்க் செயலாளர் வி.பி.ராஜா அவர்கள், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **என்.சண்முகம்**, (தம்மம்பட்டி & அஞ்சல், சேலம் மாவட்டம்.) அவர்கள், தம்மம்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.10.2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கரு. செயல்மணி
### அக்டோபர் 15 (2014)



**1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.**

**“1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்” என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி” எனவும்;**

**இரங்கல் செய்தியில் “இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன்?” என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலையில் – இன்றைக்கு

# அ.தி.மு.க. இரட்டை வேடம் போடுவது ஏன்?

## ‘நியூஸ் 18’ தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் – ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ. கேள்வி!

**சென்னை, அக். 15 –**

**நியூஸ் 18 தொலைக்காட்சியில், சி.ஏ.ஏ. முதல் முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை வரை தி.மு.க. – அ.தி.மு.க. – சிறுபான்மையினர் பக்கம் நிற்பது யார்? என்ற தலைப்பில் நடைபெற்ற ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ.அளித்த பேட்டி வருமாறு:–**

**நெறியாளர் கார்த்திகைச்செல்வன்:** இந்தப் பிரச்சினையை எப்படி அணுகுவது, இப்போது அ.தி.மு.க.வும் சேர்ந்து வருவது என்பது இந்தப் பிரச்சினைக்கான கூடுதல் கவனத்தைக் கொண்டு வரும் என்று பார்க்கிறீர்களா?

**ஆளூர் ஷா நவாஸ்:** அ.தி.மு.க.வும் சேர்ந்து வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இது ஒரு ஒட்டுமொத்த குரலாக எழும்ப வேண்டும் என்று தான், இதுநாள் வரை நாம் சொல்லிக்கொண்டிருந்தோம். எல்லோரும் இதன் பக்கம் வரவேண்டும், இது குறித்து பேசவேண்டும் என்று தான் நாம் சொல்லிக்கொண்டிருந்தோம்.

அந்த வகையில் இது ஒரு கவனஈர்ப்பாக தீர்மானமாக முன்வைக்கப்பட்டு எல்லா கட்சியும் இதில் பேசி இருக்கின்றன. பி.ஜே.பி. மட்டும் வழக்கம் போல, தமிழ்நாட்டு நலன் சார்ந்து, தமிழ்நாட்டு மக்கள் சார்ந்து எந்தத் தீர்மானத்தை எந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தாலும், பி.ஜே.பி. மட்டும் எப்படி எதிர்த்து வெளிநடப்பு செய்யுமோ அதே போல இன்றைக்கும் பி.ஜே.பி. செய்துவிட்டது.

**நெறியாளர்:** கைதிகளை சாதி மதம் என்று ஏன் பார்க்க வேண்டும்? யாரெல்லாம் அதிக காலம் சிறையில் இருந்தார்களோ, யாரெல்லாம் அதற்குத் தகுதியாக இருக்கிறார்கள் என்ற வகையில் தான் பார்க்க வேண்டும் என்ற கருத்தை வானதி முன் வைத்து இருக்கிறாரே?

**ஆளூர் ஷா நவாஸ்:** இதில் சாதிமதம் என்று யார் பார்த்தார்கள்? எல்லோரும் விடுதலையாகும் போது முஸ்லீம்கள் மட்டும் விடுதலையாகவில்லை என்பது மட்டும் தான் அங்குப் பிரச்சினை. முஸ்லீம்கள் மட்டும் ஏன் விடுதலையாகவில்லை. முஸ்லிம்களுக்கு மட்டும் அதில் என்ன பிரச்சினை.? மதம் பார்த்தது யார். முஸ்லீம்களா? அல்லது இவர்களா?

**நெறியாளர்:** வழக்கின் தன்மையை வைத்துத்தானே பார்க்க வேண்டும்?

**ஆளூர் ஷா நவாஸ் :** இதை விட கொடுமையான வழக்கில் இருந்தெல்லாம் வெளியில் வந்து இருக்கிறார்கள். எவ்வளவு கொடூரமான வழக்கு, எவ்வளவு சிக்கலான வழக்கு அதில் இருந்தெல்லாம் விடுதலையாகும் போது, முஸ்லீம் என்பதற்காக அவர்கள் சிறையில் இருக்க வேண்டும் என்று, நினைப்பதுதான் பிரச்சினை.

அதனால் முஸ்லீம்கள் என்பதற்காக அவர்கள் வைக்கப்பட்டது சரியில்லை. எல்லோருக்கும் சட்டவாய்ப்பு இருக்கும் போது, அது ஏன் முஸ்லீம்களுக்கு இல்லை என்று கேட்டுத்தான் விடுதலை செய்யுங்கள் என்று சொல்கிறோம். இவர்கள் முஸ்லீம் அதனால் விடுதலை செய்யுங்கள் என்று யாரும் கேட்கவில்லை. இவர்கள் முஸ்லீம் அதனால் உள்ளே வைக்காதீர்கள் என்றுதான் சொல்கிறோம். எல்லோரையும் வெளியே விட்டு விட்டு முஸ்லீம்கள் என்பதால் உள்ளே வைக்காதீர்கள் என்பது தான் அதன் அர்த்தம்.

அ.தி.மு.க. இதனை அரசியல்ரீதியாகத் திருப்பிவிட்டார்கள். அவர்கள் ஆதரித்தது வரவேற்கத்தக்கது, பேசினது சரி, ஆனால் ஜவாஹிருல்லா எழுந்து ஒரு விஷயத்தைப் பேச வருகிறார். அவர்கள் பேசியதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன் என்று சபாநாயகர் சொல்லியும், எதிர்க்கட்சித் தலைவர் அதனை கேட்காமல் வெளிநடப்பு செய்து ஒரு பிரச்சினையாக ஆக்கிவிட்டார்.

முதலமைச்சர் அவரிடம் கேட்டது என்ன என்றால், “இவ்வளவு தீர்க்கமாக இன்றைக்கு பேசுகிறீர்கள் வரவேற்கிறோம்., உங்கள் கருத்தோடு நாங்கள் உடன்படுகிறோம். மாற்றுக் கருத்து எல்லாம் இல்லை. ஆனால் உங்கள் கையில் தான் பத்து வருடம் ஆட்சி இருந்தது. இருபது ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கிறார்கள். இருபது ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கி றார்கள் என்கிற போது பத்து ஆண்டுகள் யார் ஆட்சி,? பத்தாண்டுகளை கடந்தவர்களை விடுதலை செய்யுங்கள் என்பது தான் நமது கோரிக்கை. அப்போது இருபது ஆண்டுகள் சிறையில் இருக்கிறார்கள் என்றால் பத்து ஆண்டுகள் கணக்கில்லை. ஏனென்றால் பத்து ஆண்டுகளை கடந்தவர்களை விடுதலை செய்யுங்கள் என்று பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே கோரிக்கை வர ஆரம்பித்து விட்டது.

இந்தக் கோரிக்கை 2011 இல் இருந்தே இருக்கிறது. இந்தப் பத்து ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சிதான். இதனை ஒரு தீர்மானமாகவோ, ஒரு கோரிக்கையாகவோ அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூட இல்லையே. வலியுறுத்துவது, அதற்காக பேசுவது, தீர்மானமாக எடுத்துக் கொள்வது எல்லாம் இரண்டாவது.

இதனை அவர்கள் ஒரு கருத்தளவில் ஒப்புக் கொள்ளக்கூட இல்லை. எங்கேயும் இது குறித்து அவர்கள் பேசவில்லை. அதனைக் கண்டு கொள்ளாமல் தான் அ.தி.மு.க. நடந்தது. ஆட்சி போய்விட்டது. இந்த ஆட்சி வந்து இரண்டரை வருடம் ஆகிவிட்டது. இந்த ஆட்சியிலும்கூட, இந்த இரண்டரை ஆண்டு காலத்தில், இந்த ஆட்சிக்கு நாங்கள் எல்லாம் கூட்டணியில் இருந்து குரல் கொடுக்கிறோம். கூட்டணியில் இருந்து இது குறித்து பேசிக்கிட்டு இருக்கிறோம். சட்டப் பேரவை தொடங்கிய நாளில் இருந்து தொடர்ந்து இந்தப் பிரச்சினை குறித்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அ.தி.மு.க. – எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றரை மணி நேரம் காவல்துறை மானியத்தில், சிறைத் துறை மானியத்தில் பேசுகிறார், இந்த இரண்டரை ஆண்டுகாலத்தில் ஒரு வார்த்தை கூட இதைப்பற்றி குறிப்பிட்டு பேசியதே கிடையாது. இதற்கு முன்னால் நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை இரண்டரை வருடமாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கொடுத்ததே கிடையாது.




அப்போது இதில் அவர்களுடைய ரோல் ஒன்றும் கிடையாது. இன்றைக்கு அவர்கள் எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது. அதனை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. ஏன் என்றால் நாம் நமது அரசியலை பார்ப்பதை விட, அந்த சிறைவாசிகள் நலனைப் பார்க்க வேண்டும். அவர்களுக்காக எத்தனை குரல் இணைந்தாலும், அது அவர்களுக்கு வலிமை. எந்தக் குரல் என்றாலும் அது வலிமை.

**நெறியாளர்:** அன்சார் ஒரு விஷயம் குறிப்பிடுகிறார் தி.மு.க. ஆட்சியிலும் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது, அதுவும் இன்றைக்குச் சிக்கலாக இருக்கிறது என்கிறாரே.

**ஆளூர் ஷா நவாஸ்:** அதுதான் இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பவர்கள் பிரச்சினை. பத்து ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக அ.தி.மு.க. தான் ஆட்சியில் இருந்திருக்கிறது. இந்த நடவடிக்கைகளில் ஒரு நகர்வைக் கூட அந்த ஆட்சிக் காலத்தில் நம்மால் பார்க்க முடியவில்லை.

இந்த ஆட்சி வந்தபிறகு தான், ஆதிநாதன் குழு அமைக்கப்பட்டது, ஒரு நகர்வு, அடுத்தது இருபது பேரை விடுவித்து அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. அடுத்த நகர்வு இது. ஒன்றுமே நடக்காத இடத்தில் ஒவ்வொரு நகர்வையும் இந்த ஆட்சிக் காலத்தில் தான் பார்த்து இருக்கிறோம்.

இன்றைக்கு இதனை கவன ஈர்ப்பாக எடுத்துக் கொண்டு அனைத்துக் கட்சிகளும் விவாதிக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது.

இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறது என்றால் இந்த அரசாங்கம், அவர்களை விடுதலை செய்ய விரும்புகிறது. அது தான் ரொம்ப முக்கியம். ஒவ்வொருவரும் இதனை கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று கட்டுக் கட்டாக சபாநாயகரிடம் கொண்டுவந்து கொடுக்கிறார்கள்.

அவை எல்லாம் எடுப்பதற்கு வாய்ப்பும் இல்லை. சட்டப்பேரவை குறைந்த நாட்கள் கூடுகிறது. எல்லாவற்றையும் விவாதிக்கவும் முடியாது.

அப்படி என்றால் அரசுக்கு அதில் உடன்பாடு இருப்பதால்தான், இது குறித்து ஒரு வெளிப்படைத் தன்மை இருப்பதால் தான் எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்தாலும் பரவாயில்லை, இதில் அவர்கள் அரசியல் செய்தாலும் பரவாயில்லை. இந்தக் கருத்து நமக்கு உடன்பாடு தான் என்று சொல்லி இந்த அரசு இதனை எடுத்து, இதில் எல்லா உறுப்பினர்களையும் பேசவைத்து இருக்கிறது.

எல்லா உறுப்பினர்களும் இதில் பேசி இருக்கிறோம். அந்த அளவிற்கு ஒரு ஜனநாயகப் பூர்வமான ஒரு விவாதம் தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் சிறைவாசிகள் விஷயத்திற்காக கவன ஈர்ப்பாக எடுக்கப்பட்டு, அனைத்துக் கட்சிகளும் பேசக் கூடிய ஒரு நிலை இந்த ஆட்சியில் தான் வந்திருக்கிறது. இப்போது ஒவ்வொரு நகர்வையும் இந்த ஆட்சியில் பார்க்கிறோம். இந்த ஆட்சிதான் அவர்களை விடுதலை செய்யும் என்று நம்புகிறோம்.

இந்த ஆட்சி வந்த பிறகு அண்ணா பிறந்த நாளின் போது சிறைவாசிகள் விடுதலை செய்யப்படும் போது, ஏன் அதில் முஸ்லிம் சிறைவாசிகள் இல்லை என்று கேட்டார்கள். அப்படி கேட்கும் போது அந்தக் கைதிகள் எல்லாம் எந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால், இப்போது எந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களோ இஸ்லாமியர்கள் அந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

அவர்கள் எல்லோர் பற்றிய கோப்புகளும் ஆளுநருக்குப் போகும். ஆளுநர் கையெழுத்து போட்டால் பல பேர் விடுதலை ஆவார்கள். இதுதான் இது வரை நடைபெற்ற நடைமுறை. அப்படி விடுதலை செய்யப்படும்போதெல்லாம் நாம் அரசை நோக்கி என்ன கேட்டோம். ‘எல்லோரும் விடுதலை ஆகிறார்களே ஏன் முஸ்லீம்களை மட்டும் விடுதலை செய்யவில்லை’ என்று கேட்டோம். அதற்கு மத ரீதியான வழக்குகளில் சிக்கியவர்களை விடுவிக்க முடியாது என்கின்ற திருத்தம் தான் காரணம் என்று சொன்னார்கள். இப்போது 20 பேர் விடுதலை செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது.

அதிலும் முதலமைச்சரின் அதிகாரம், அமைச்சரவையின் அதிகாரத்தின் மூலம் தான் அரசாணை வர முடியும். அது யாரோ கையெழுத்து போட்டு அனுப்புவது இல்லை. 20 பேரை விடுவித்து ஆளுநருக்கு கோப்பை அனுப்பி இருப்பதும் அமைச்சரவையின் இந்த அரசாங்கத்தின் முடிவு தான். எனவே அந்த முடிவு ஆளுநரிடத்தில் போய் இருக்கு. அந்த ஆளுநர் அதற்கு காலதாமதம் செய்கிறார்.

தி.மு.க.வினர் எப்போதுமே எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்ய மாட்டார்கள். முஸ்லீம் இட ஒதுக்கீடு தொடர்பாக நீங்கள் பார்க்க வேண்டும். ஆந்திராவில் முஸ்லீம் இட ஒதுக்கீடு 5 சதவிகிதம் கொடுத்தார் இராஜசேகர ரெட்டி. எதிர்த்து நீதிமன்றத்திற்கு போனார்கள். முடிந்து போனது.

கலைஞர் இங்கே 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு கொடுத்தார். எதிர்த்து நீதிமன்றத்துக்கு போனார்கள், ஆனால் முடியவில்லை. சட்டம் நிற்கிறது. அந்த அளவிற்கு பார்த்து ஆணையம் போட்டு அதனுடைய பரிந்துரையை பெற்று, எந்த சட்டச் சிக்கலும் வர முடியாத அளவிற்கு வரக்கூடாத அளவிற்கு பார்த்து செய்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் இதுவும் எதிரிகளால் குறி வைக்கப்பட்ட வழக்கு. மற்ற கைதிகளை இந்த அளவிற்கு யாரும் பின் தொடர்ந்து போய் அவர்கள் விடுதலைக்கு இடையூறாக நிற்க மாட்டார்கள். ஆனால், பி.ஜே.பி. உள்ளிட்ட சக்திகள் இந்தச் செய்தி வெளிவரும் போதே இவர்கள் விடுதலை ஆகப்போகிறார்கள் – இந்த அரசு விடுவிக்கப்போகிறார்கள் என்ற செய்தி வெளிவந்த உடனேயே எவ்வளவு பெரிய லாபி செய்கிறார்கள். எத்தனை பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக போட்டன.

ஜார்க்கண்ட் கவர்னர் சி.பி.ஆர்.உள்ளிட்ட பலரும் அறிக்கை கொடுத்தார்கள். ‘நீங்க தீவிர வாதிகளை விடுதலை செய்யப்போகிறீர்களா?’ என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். இப்போதும் எதிர்ப்பு தெரிக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் தெருவில் போகின்ற சாதாரணமான அமைப்பு அல்ல. லெட்டர் பேடு கொண்ட ஒரு கட்சி அல்ல, அவர்களின் பவர் என்னவென்று பார்க்க வேண்டும். இந்தியாவை ஆளக்கூடிய வர்க்கம். அதிகார வர்க்கம், அந்த சிந்தனை உள்ளவர்கள் அதிகார வட்டத்தில் நிரம்பிக் கிடக்கிறார்கள்.

இந்த அரசு ஒரு நல்ல விஷயத்தை முன்னெடுத்தால் எந்த அளவிற்கு அவர்கள் இடையூறு செய்வார்கள் என்பது நாம் சேர்த்துப் பார்க்க வேண்டி இருக்கு. இதனையெல்லாம் தாண்டித்தான் இந்த அரசு இந்த இரண்டாண்டுகளில் இவ்வளவு நகர்த்திக் கொண்டு வந்து, இருபது பேரை விடுவித்து, அரசாணை வெளியிட்டு இருக்கிறது.

நாங்கள் இன்னும் சொல்கிறோம். இது இப்போது ஆளுநரிடம் போய் இருக்கிறது. இதில் ஆளுநர் முடிவு எடுக்கவில்லை என்றால்,அரசு முடிவு எடுக்கும் என்ற அந்த நம்பிக்கை இருக்கும். இன்னும் மீதமுள்ள சிறைவாசிகளையும் விடுதலை செய்ய வேண்டும். அவர்களையும் விடுதலை செய்து இதே மாதிரி அனுப்புங்கள் முடிவு எடுப்போம். எப்படியும் கவர்னரிடம் போனாலும் அவர் முடிவு எடுக்கப்போவதில்லை.

அரசாணை வெளியிட்டு அனுப்பினாலும் அவர் முடிவு எடுக்கப்போவதில்லை, 162 போட்டு அனுப்பினாலும் அவர் முடிவு எடுக்க மாட்டார். எப்படி போனாலும் நாம் நீதிமன்றத்திற்குப் போய் தான் இந்த சவாலை சந்தித்துத் தான் இதனை சாத்தியப்படுத்த வேண்டும் என்பது தான் நம்முடைய நிலைமை. அப்படி இருக்கும் போது அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்து கொண்டு இருக்கிறது. இதில் இன்னும் இந்த அரசு மீதமுள்ள சிறைவாசிகளையும் முழுமையாக விடுதலை செய்ய வேண்டும் என்பது தான் நமது கோரிக்கை.

இவ்வாறு ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.




புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அம்பாள் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி தொகைக்கான காசோலைகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (13.10.2023) வழங்கினார். உடன் திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட

# நீட்தேர்வு பயிற்சி மையங்கள் மூலம் ரூ.2.15 கோடி வீண் செலவு!

## தணிக்கை அறிக்கையில் தகவல்

*சென்னை, அக். 15 –*

கணக்கு தணிக்கை துறை அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: நீட், ஜே.இ.இ. போன்ற போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள அரசு, அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களை தயார் செய்யும் வகையில் ‘இலவச பயிற்சி மையங்கள்’ அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்டது. அதன்படி, கல்வி துறை 412 பள்ளிகளை பயிற்சி மையங்களாகக் மாற்றியது. இதில் 27 மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் மொத்தம் 73,885 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அந்த ஆண்டு நீட் தேர்வில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்ச்சி முடிவுகள் வெளியாகி உள்ளது. அதே நேரத்தில் நடைபெற்ற ஜே.இ.இ. பயிற்சியில் பயின்ற மாணவர்களின் விவரங்கள் துறையால் பராமரிக்கப்படவில்லை. மேலும், ஜே.இ.இ. பயிற்சிக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால், ஒப்பந்த விதிகளை மீறி பயிற்சி அளிக்கும் நிறுவனத் தேர்வில் அ.தி.மு.க. அரசு ஈடுபட்டது. அதாவது, அதிமுக ஆட்சியில் பள்ளிக் கல்வி அமைச்சர், துறையின் முதன்மை செயலாளர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு பயிற்சி நிறுவனம், பவர் பாயின்ட் விளக்கக்காட்சியின் அடிப்படையில் மட்டுமே சேவை வழங்குநர் இறுதி செய்யப்பட்டார்.

மேலும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வி சேவைகள் கழகத்தின் நிதியிலிருந்து ரூ.19.79 கோடி செலவில் 412 பயிற்சி மையங்களை அமைப்பதற்கான முன்மொழிவை தமிழக அரசு ஏற்றுக்கொண்டது. நுழைவுத் தேர்வுக்கு இலவசப் பயிற்சி அளிக்கும் திட்டம் 2017ம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்டது. அக்டோபரில் தமிழ்நாடு அரசு 412 மையங்களில் பயிற்சி நடத்த இறுதி செய்யப்பட்ட சேவை வழங்குனர் ‘சாய் ஸ்பீட் மருத்துவ நிறுவனம் பிரைவேட் லிமிடெட்’ உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செயல்படுத்தியது. 2017ல் 100 பயிற்சி மையங்களும், 2018ல் 312 பயிற்சி மையங்களும் தொடங்கப்பட்டது. 2018 டிசம்பரில் வகுப்புகளை ஒளிபரப்புவதற்கு மையப்படுத்தப்பட்ட ஸ்டுடியோவை நிறுவுவதற்கான வன்பொருள் வழங்குவதற்கான பணி உத்தரவு வழங்கப்பட்டது.

# மாநிலங்கள் தீட்டும் திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தும் போதுதான் உண்மையான கூட்டாட்சி மலரும்!

## ஏ.பி.பி. நெட்வொர்க் - தென் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, அக்.15

**மாநிலங்கள் தீட்டும் திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தும் போதுதான் உண்மையான கூட்டாட்சி மலரும் என்று ஏ.பி.பி. நெட்வொர்க் - தென் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

ஏ.பி.பி. நெட்வொர்க் 'தி சதர்ன் ரைசிங் சம்மிட்' என்ற பெயரில் தென் மாநில அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற மாநாட்டை நேற்று முன்தினம் சென்னையில் நடத்தியது. இதில் கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நிறைவுரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 'தமிழ்நாடு மாடல் என்பதிலிருந்து இந்தியா என்ன கற்றுக்கொள்ளலாம்?' என்ற தலைப்பில் என்னை உரையாற்ற அழைத்த ஏ.பி.பி. நெட்வர்க் நிறுவனத்துக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வேகமாக வளர்ச்சியடைந்து வருவது மட்டுமல்லாமல், இந்திய துணைக் கண்டத்துக்கே வழிகாட்டியாக திகழும் சூழலில், 'தெற்கு எழுகிறது' என்று மிகப் பொருத்தமாக இந்த நிகழ்ச்சிக்குத் தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஆம், தெற்கு எழுகிறது. இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு மிகப்பெரிய உயரங்களை தொட்டு எழுச்சிப்பெற்று வருகிறது.

கடந்த 50 ஆண்டுகளாக, தென்னிந்திய மாநிலங்கள் தேசிய சராசரியைவிட மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன.

ஒரு நல்ல அரசு என்பது, உணவு உற்பத்தி - கல்வி - சுகாதாரம் - தொழில்துறை ஆகிய அம்சங்களில் சிறந்து விளங்க வேண்டும் என்று சொல்வார்கள்.

### உச்சங்களைத் தொட்ட தமிழ்நாடு!

உணவுப் பாதுகாப்பு, வேளாண்மை, கல்வி, சுகாதாரம் மற்றும் தொழிற்துறை என பல துறைகளிலும் தமிழ்நாடு மிகப்பெரிய உச்சங்களைத் தொட்டுள்ளது. சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய மாநிலங்கள் பெரும்பாலானவை ஒரே நிலையில் தான் இருந்தன.

எல்லா மாநிலத்துக்கும், ஒரே மாதிரியான வாய்ப்புகள் தான் இருந்தது. ஆனால், தென் மாநிலங்கள், குறிப்பாக தமிழ்நாடு இந்தளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றால், இங்கு நிகழ்ந்த சமூக பொருளாதார புரட்சி தான் காரணம்.

உழுதவருக்கே நிலம் சொந்தம் என்கிற வகையில் நில உச்சவரம்பு சட்டத்தை கொண்டு வந்து ஏழை - எளிய மக்களுக்கு நிலங்களை வழங்கியவர் கலைஞர் அவர்கள்.

உணவு உற்பத்தியை பெருக்கியதோடு, உணவுப்பொருட்களை குறைந்த விலைக்கும், கட்டணமின்றியும் அனைவருக்கும் கொண்டு சேர்த்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு முன்னோடி உணவு கொள்முதல் மற்றும் வினியோக அமைப்பாக Tamil Nadu Civil Supplies Corporation உள்ளது. தமிழ்நாட்டின் பொது விநியோக முறை, Public Distribution System என்பது வலிமையானது.

மருத்துவம் மற்றும் கல்விக்குச் சமமான முக்கியத்துவத்தை தி.மு.க. தந்து வருகிறது.

### மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

நமது முதலமைச்சர் அவர்கள், தலா 250 கோடி ரூபாய் மதிப்பில், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தையும், சென்னையில் ஆயிரம் படுக்கை வசதி கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையையும் கட்டியிருக்கிறார்.

போலவே, தொழிற்துறையில் அதிசயிக்கத்தக்க வகையில் தமிழ்நாடு பல சாதனைகளைப் புரிந்து வருகிறது.

1997இல் இந்தியாவிலேயே தகவல் தொழில்நுட்பக் கொள்கையை முதன்முதலில் உருவாக்கியது தமிழ்நாடுதான். மேலும், கல்வி நிலையங்களில் கணினிக் கல்வியை மிகப்பெரிய அளவில் அறிமுகப்படுத்தியதும் நாங்கள்தான்.

### நாட்டிலேயே வளமான மாநிலம் தமிழ்நாடு!

நாட்டிலேயே வளமான மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. தொழிற்துறை வளர்ச்சியில் நாங்கள் மகாராஷ்டிராவுடன் போட்டி போட்டு வருகிறோம்.

இப்படியான வேகமான வளர்ச்சிக்கு, மிக முக்கியமான காரணம் என்று நான் கருதுவது, நாங்கள் கடைப்பிடிக்கும் இருமொழிக் கொள்கைதான். ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டது எங்களுக்குப் பெரிய அளவில் உதவியது.

1960களில், ஆங்கிலத்தை அலுவல் மொழி என்பதிலிருந்து நீக்க முயற்சிகள் நடந்தபோது, இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் தி.மு.க. முன்னணியில் நின்றது.

மாநிலம் முழுவதும் தி.மு.க. தொண்டர்கள் போராடினர். அது மக்கள் இயக்கமாக மாறி, மொழி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தியது.

ஆங்கிலம் அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்ற போராட்டத்தில் நாங்கள் வெற்றிபெற்றோம். அந்த வெற்றிதான், இப்போதைய எங்களின் வளர்ச்சியில் பிரதிபலிக்கிறது.

### தமிழ்நாட்டு விஞ்ஞானிகளால் இஸ்ரோ மிளிர்கிறது!

நாசா முதல் சிலிக்கான் பள்ளத்தாக்கு வரை, எங்கள் மக்கள் எல்லா இடங்களிலும் முந்தியிருக்கிறார்கள். அங்கெல்லாம் தமிழர்கள் மிக முக்கியமான பொறுப்புகளில் இருக்கிறார்கள். இதற்கு மிகச் சமீபத்திய உதாரணமாக, தமிழ்நாட்டில் படித்த விஞ்ஞானிகள் பலர் கடந்த சில பத்தாண்டுகளாக இஸ்ரோவில் மிளிர்ந்து வருவதைச் சொல்லலாம்.

சந்திரயான் 1 திட்ட இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை முதல் சந்திரயான் 3 திட்டத்தில் மிக முக்கியப் பங்காற்றிய திரு.வீரமுத்துவேல், ஆதித்யா எல் 1 திட்ட இயக்குநர் திரு. நிஹார் ஷாஜி போன்ற திறமையாளர்கள் பலரை தமிழ்நாடு உருவாக்கியுள்ளது.

அந்த விண்வெளி விஞ்ஞானிகளைச் சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசு விழாவில், "நான் அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் படித்துத்தான் இந்த அளவுக்கு உயர்ந்தேன்" என்று வீரமுத்துவேல் குறிப்பிட்டார்.

திராவிட மாடல் பின்பற்றும் மொழிக் கொள்கையால் ஏற்பட்டுள்ள வளர்ச்சி என்ன என்பது பற்றிய கேள்விகளுக்கு வீரமுத்துவேல் போன்றோர்தான் எங்களின் பதில்.

பெரிய சிந்தனையாளர்களை, விஞ்ஞானிகளை, திறமைமிக்க இளைஞர்களை உருவாக்குவதோடு திராவிட மாடலின் வளர்ச்சி வரலாறு நின்றுவிடவில்லை.

எங்களின் தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் போன்றோர் மிக முக்கியமான சீர்திருத்தங்கள், புரட்சிகளை மேற்கொண்டார்கள். அவற்றைப் பற்றிச் சில வார்த்தைகளை உங்களிடம் பகிர விரும்புகிறேன்.

1967 இல் தி.மு.க. முதல் முறை ஆட்சியில் அமர்ந்தபோது, சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதுபோன்ற திருமணங்கள் செல்லும் என்று உச்ச நீதிமன்றமே இப்போதுதான் அங்கீகரித்திருக்கிறது.

1970களில் பேருந்துகள் அரசுடைமையாக்கியது, கிராமப்புற மக்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கியது.

1989 இல் கலைஞர் ஆட்சியில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டது. அதே ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டது. இந்த இரண்டு திட்டங்களும் சமுதாயத்தில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தன.

கலைஞர் அவர்களால் நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்ட காரணத்தாலும், கல்விக் கட்டணங்களுக்கு உதவியதாலும் ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலைச் சமூகங்களில் இருந்து இலட்சக்கணக்கான முதல் தலைமுறை பொறியாளர்கள், மருத்துவர்கள் உருவானார்கள்.



### சமூக நலத் திட்டங்கள்!

கலைஞர் போட்டுக் கொடுத்த பாதையில் இன்று பல சமூகநலத் திட்டங்களை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அந்தத் திட்டங்கள் பற்றியெல்லாம் இந்தத் துணைக் கண்டத்தில் இதற்கு முன் யாருமே சிந்தித்ததில்லை.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் சுமார் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். 'நான் முதல்வன்' திட்டம் மூலம் சுமார் 13 இலட்சம் கல்லூரி மாணவர்கள் வேலைவாய்ப்புக்கான திறமைகளோடு தயாராகி வருகிறார்கள். விடியல் பயணத்தின் மூலம் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணிக்கிறார்கள். இவற்றின் மூலம் திராவிட மாடல் அரசு என்பது இதர மாநில அரசுகள் பின்பற்றத்தக்க 'ரோல் மாடல்' அரசாக மாறி வருகிறது.

எங்களின் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பின்பற்றி, சமீபத்தில் தெலங்கானா அரசு அதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. போலவே, எங்களுடைய விடியல் பயணத்தைப் பின்பற்றி கர்நாடக அரசும் அதுபோன்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், எங்கள் அரசின் கிரீடத்தில் உள்ள பொன்னாக மின்னுகிறது. குடும்பத் தலைவிகளுக்கு நிதி வழங்குவதன் மூலம், மக்களிடையே பணப்புழக்கத்தை ஏற்படுத்தும் அரசின் இந்த மாபெரும் நிதிப் பொறுப்புணர்வுத் திட்டம், நாடு முழுவதிலும், 'அடடா இப்படி ஓர் அரசு எங்களுக்கு அமையவில்லையே' என்று ஏக்கக் குரல்களை எழுப்ப வைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், சுமார் 1 கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரம் பெண்கள் மாதம் 1,000 ரூபாய் பெறுகிறார்கள்.

இவை தவிர்த்து, தி.மு.க. எப்போதும் பேசி வரும் ஒரு விஷயம், கூட்டாட்சித் தத்துவம். மாநில உரிமைகளுக்காக தி.மு.க. தொடங்கப்பட்ட 1949 ஆம் ஆண்டு முதல் நாங்கள் குரல் கொடுத்து வருகிறது.

இந்தியா போன்ற பரந்த, பன்மைத்துவம் கொண்ட நாட்டுக்கு, 'அனைத்துக்கும் ஒரே அளவு' என்கிற அணுகுமுறை ஒத்துவராது என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

தங்கள் மக்களுக்குத் தேவையான திட்டங்களைத் தாங்களே தீட்டிக் கொள்ள மாநிலங்களுக்குப் போதுமான அளவு வசதி வழங்கப்பட வேண்டும்.

இதன் மூலம் மாநில அரசுகள் பல புதுமையான திட்டங்களைக் கொண்டு வரும். அதைப் பார்த்து இதர மாநிலங்களும் கற்றுக் கொள்ள முடியும்.

பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் 52 சதவீதமாக இருக்கிறது. இது அமெரிக்காவைவிடச் சிறந்தது. அங்கே இந்த எண்ணிக்கை வெறும் 41 சதவீதம்தான். மேலும் பல ஸ்காண்டிநேவிய நாடுகளுக்கு இணையாகவும் தமிழ்நாட்டின் இந்தச் சாதனை திகழ்கிறது.

### உண்மையான கூட்டாட்சி!

இதெல்லாம் சில உதாரணங்கள் தான். இதைப் போல ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு குறிப்பிட்ட துறைகளில் நன்றாகப் பரிணமிக்கின்றன. அந்த மாநிலங்களைப் போல வேறு சில மாநிலங்கள் கற்றுக்கொள்ளலாம். அந்தத் திட்டங்களில் தங்களுக்கு ஏற்றவாறு மாறுதல்களையும் செய்துகொள்ளலாம். அதைச் செய்வதற்கு ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு வேண்டும். எனவேதான் நாங்கள் ஒன்றிய அரசை மாநில அரசுகளுக்கு ஆதரவாக இருக்கும்படி கேட்கிறோம். மாநிலங்களுக்கான திட்டங்களைத் தீட்டாமல், மாநிலங்கள் தீட்டும் திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பாக ஒன்றிய அரசு இருக்கும்போதுதான், உண்மையான கூட்டாட்சி மலரும்.

ஆனால் துர்பாக்கியமாக, கடந்த சில ஆண்டுகளாக ஒன்றிய அரசு மேற்கண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, எல்லாவிதமான அதிகாரங்களையும் தன்னிடம் வைத்துக்கொண்டு, தன் சொல் பேச்சுக் கேட்டு நடக்கும்படி மாநிலங்களை வற்புறுத்துகிறது.

தன்னாட்சிமிக்க விசாரணை அமைப்புகளைத் தனது அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதற்காக ஒன்றிய அரசு பயன்படுத்துகிறது.

### ஆளுநர்கள் மூலம் மாநிலங்களை சீர்குலைக்கிறது!

பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு ஆளுநர்களை அனுப்பி அந்த மாநிலங்களைச் சீர்குலைக்கிறது ஒன்றிய அரசு. அதற்கு மிகச்சிறந்த உதாரணம், தமிழ்நாடு ஆளுநர் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

நம் மீது சுமத்தப்பட்டிருக்கும் இன்னொரு பயங்கரம் 'நீட்'. கடந்த காலங்களில் ஒருவர் மருத்துவம் படிக்க வேண்டும் என்று விரும்பினால், அவருக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற கட்டாய விதி இருந்தது. நீதிக் கட்சி, தன் ஆட்சியின்போது அந்த விதியை ஒழித்தது.

2014 முதல், ஒன்றிய அரசுக்கு வரியாக தமிழ்நாடு சுமார் 5 லட்சம் கோடி ரூபாய் கொடுத்துள்ளது. ஆனால் நமக்குத் திரும்பக் கிடைத்ததோ வெறும் 2 லட்சம் கோடி ரூபாய் தான். ஆனால் பா.ஜ.க. ஆளும் உத்தர பிரதேசம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் வெறும் 2 லட்சம் கோடி ரூபாய் மட்டுமெ செலுத்தியது. ஆனால் அதற்கு 9 லட்சம் கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. இது மிகச் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு இழைக்கும் அப்பட்டமான அநீதி.

### மக்களவைத் தொகுதி: தென்னிந்தியா பாதிப்பு!

அது மட்டுமல்ல. மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு மூலமாக தென்னிந்திய மாநிலங்களைத் தண்டிக்கும் மிகப்பெரிய சூழ்ச்சி பின்னப்படுகிறது.

70களில், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒன்றை அரசு பிரபலப்படுத்தியது. அதைத் தென்னிந்திய மாநிலங்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தின.

அதன் மூலம், மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு மக்கள் தொகை பெருகாமல் கட்டுப்படுத்தியதே, தென்னிந்திய மாநிலங்களுக்கு எதிரானதாகி விட்டது.

மக்கள் தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு மாநிலங்களுக்கும் இடம் வழங்கப்பட வேண்டும் என்பதும், மக்கள் தொகைக்கு ஏற்ப தொகுதிகள் எண்ணிக்கை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

> **நாட்டிலேயே வளமான மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. தொழிற்துறை வளர்ச்சியில் நாங்கள் மகாராஷ்டிராவுடன் போட்டிபோட்டு வருகிறோம்.**
>
> **இப்படியான வேகமான வளர்ச்சிக்கு, மிக முக்கியமான காரணம் என்று நான் கருதுவது, நாங்கள் கடைப்பிடிக்கும் இருமொழிக் கொள்கைதான். ஆங்கிலத்தை ஏற்றுக்கொண்டது எங்களுக்குப் பெரிய அளவில் உதவியது.**
>
> **1960களில், ஆங்கிலத்தை அலுவல் மொழி என்பதிலிருந்து நீக்க முயற்சிகள் நடந்தபோது, இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் தி.மு.க. முன்னணியில் நின்றது.**
>
> **மாநிலம் முழுவதும் தி.மு.க. தொண்டர்கள் போராடினர். அது மக்கள் இயக்கமாக மாறி, மொழி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தியது.**
>
> **ஆங்கிலம் அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்ற போராட்டத்தில் நாங்கள் வெற்றிபெற்றோம். அந்த வெற்றிதான், இப்போதைய எங்களின் வளர்ச்சியில் பிரதிபலிக்கிறது.**

நீட் மூலம் பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டில் 22 உயிர்களைக் காவு வாங்கியிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் மருத்துவராக விரும்பிய மாணவர்கள் பலர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

### மருத்துவக் கல்வியை சீர்குலைக்கும் ஒன்றிய அரசு!

மிகச் சமீபத்தில், தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் விதமாக இன்னொரு நடவடிக்கையை ஒன்றிய அரசு எடுத்துள்ளது. அதுதான் தேசிய மெடிக்கல் கவுன்சில் அறிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகள். அதில் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியும் ஒவ்வொரு 10 இலட்சம் பேருக்கு 100 எம்.பி.பி.எஸ். இடங்கள் என்ற விதியைப் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விதியைப் பின்பற்றினால், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா என ஐந்து தென்னிந்திய மாநிலங்களும் புதிதாக மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்த முடியாது. மாநிலங்கள் புதிய கல்லூரிகளைக் கட்டுவதை ஏன் தடுக்க வேண்டும்? வளர்ச்சியடைந்து வரும் மாநிலங்களுக்கு வழங்கப்படுற தண்டனை இது.

தென்னிந்திய மாநிலங்கள் ஒன்றிய அரசுக்கு அதிக அளவில் வரி கொடுப்பதும், பதிலாக மிகச் சொற்பமான பங்கே கிடைப்பதும் புதிதல்ல. ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு செலுத்தும் ஒரு ரூபாய் வரியில், நமக்குத் திரும்பக் கிடைப்பது என்னவோ வெறும் 29 பைசாதான்.

இந்த அநீதி பற்றி மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் சில நாட்களுக்கு முன்பு சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

1970களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த மாநில அரசுகளை வலியுறுத்திய ஒன்றிய அரசு, அரசியலமைப்பில் கொண்டு வந்த ஒரு சட்டத் திருத்தத்தின் மூலம், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்பதை சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்திருந்தது. 1976 இல் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத் திருத்தம், 2000 வரை தொகுதி மறுசீரமைப்பைத் தள்ளி வைத்தது.

2001 இல் இந்தப் பிரச்சினை தலைதூக்கிய போது, மறுசீரமைப்பால் தொகுதிகளை இழக்க நேரிடும் சில மாநிலங்களின் எதிர்ப்பால், அன்றைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு 84வது சட்டத் திருத்தத்தின் மூலம், தொகுதி மறுசீரமைப்பை அடுத்த 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2026 வரை ஒத்தி வைத்தது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் தொகுதி மறுசீரமைப்பை நாம் மேற்கொள்ள வேண்டும். எனில், அது எப்படி நம்மை பாதிக்கும்? தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேசம், தெலங்கானா என ஐந்து மாநிலங்களும் மக்களவையில் தங்களின் இடங்களை பறிகொடுக்கும்.

மக்களவை இடங்களின் எண்ணிக்கையை மாற்றாமல் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டால், 39 மக்களவைத் தொகுதிகளைக் கொண்ட தமிழ்நாடு, 8 தொகுதிகளை இழக்க நேரிடும்.

தென்னிந்திய மாநிலங்களின் குரலை ஒடுக்குவதற்கான முயற்சி இது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆகவேதான், தொகுதி மறுசீரமைப்பை நம் தலைக்கு மேல் தொங்கும் கத்தி என்கிறார் நமது முதலமைச்சர். நமது உரிமைகளைப் பறிக்கும் இந்தச் சூழ்ச்சியில் சிக்காமல் நாம் அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும்.

மாநில உரிமைகளுக்காகப் போராடும் பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த நடவடிக்கையை எதிர்க்கும் என்று நான் நம்புகிறேன். இது அநியாயம் என்று உணர்கிற ஒவ்வொரு குடிமகனும் இதை எதிர்ப்பார். இந்த மக்கள் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தி.மு.க. முன்னணியில் இருக்கும் என்பதை நான் உறுதிகூறுகிறேன்.

### ஊடக நண்பர்களுக்கு வேண்டுகோள்!

இதுகாறும் என் உரையைக் கேட்ட ஊடக நண்பர்களுக்கு நான் ஒரு கோரிக்கையை வைக்கின்றேன். நான் மேற்சொன்ன விஷயங்களில் இருந்து, சமூக மேம்பாட்டில், நாட்டில் உள்ள இதர மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு தனித்து நிற்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

எனினும், ஊடகங்கள், அதிலும் வடநாட்டு ஊடகங்கள் தமிழ்நாட்டைப் பற்றி முன் தீர்மானத்துடன் கூடிய பார்வையையே கொண்டிருக்கின்றன. நம்முடைய சாதனைகளையும், தனித்துவத்தையும் கூறுவதற்குப் பதிலாக, சில வட இந்திய ஊடகங்கள், நமது மாநிலத்தைப் பிரித்தாளும் மாநிலமாகச் சித்தரிக்கின்றன. நாம் பிரித்தாளுபவர்கள் இல்லை.

நாம் நாட்டுப் பற்றுடைய மக்கள் தான். நாட்டினுடைய வளர்ச்சிக்குப் பாடுபடும் முதல் மாநிலம் நாம்தான்.

பா.ஜ.க. போன்ற சில சுயநலக்கார அரசியல் கட்சிகளின் சூழ்ச்சிகளுக்கு ஊடகங்கள் எப்படி இரையாகிவிட்டன என்பதற்குச் சில நிகழ்வுகளையும் நான் சுட்டிக்காட்ட முடியும்.

### எனது பேச்சை தவறாகச் சித்தரித்த பா.ஜ.க.!

சாதியப் பாகுபாடுகள் அற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றி நான் சமீபத்தில் பேசியிருந்தேன். எனது பேச்சை தவறாகச் சித்தரித்து, கேவலமான அரசியல் பலன்களுக்காக அதைத் திரித்துப் பரப்பி வருகின்றது பா.ஜ.க.

என்னுடைய கருத்தில் உள்ள உண்மையையும், பா.ஜ.க. பரப்பி வரும் பொய்யையும் பற்றி எடுத்துக் கூறுவதற்குப் பதிலாக, வட இந்திய ஊடகங்கள் அதுகுறித்துத் தினந்தோறும் விவாத நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றன.

அரசுக்கு எதிராக உண்மையைப் பேச வேண்டிய ஊடகங்கள் அரசியல் கட்சிகளின் பொய்ச் செய்திகளுக்கு இரையாவது கண்டு கவலை ஏற்படுகிறது.

ஊடகங்களுக்கும் சமூக பொறுப்பு இருக்கிறது. அரசியல் வாதிகளைப் போல, உங்களையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த பொறுப்பை உணர்ந்து நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

### பேரறிஞர் அண்ணாவின் புகழ் பெற்ற வாசகம்!

பேரறிஞர் அண்ணாவின் புகழ் பெற்ற வாசகத்தைக் கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

"மக்களிடம் செல், அவர்களிடையே வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களோடு சேர்ந்து திட்டமிடு, அவர்களிடம் என்ன இருக்கிறதோ, அதை வைத்து கட்டமைப்பு செய்' என்றார் அண்ணா.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா என்ன சொன்னாரோ, அந்தப் பாதையில் நமது முதலமைச்சர் மக்கள் நலன் சார்ந்த அரசை வழி நடத்திச் செல்கிறார்.

நம்மைப் போன்ற தென்னிந்தியர்களுடன் இன்னும் ஜனநாயகப்பூர்வமான உரையாடல்களை மேற்கொண்டு, நாட்டின் நலன் கருதி, தமிழ்நாட்டின் மீது தாங்கள் கொண்டிருக்கும் தவறான பார்வைகளை வட இந்திய ஊடகங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் முன்னேற்றத்துக்காக, தமிழ்நாடும் தி,மு.க.வும் தமிழர்களும் என்றும் பாடுபடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.





கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 18 தொடர் மருத்துவப் பரிசோதனை முகாம்களின், முதல் நிகழ்ச்சியை சென்னை வால்டாக்ஸ் சாலையில் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., மேயர் பிரியா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் அனைத்து கட்சிகள், அனைத்து விவசாய சங்கங்கள் சார்பில் காவேரி படுகை மாவட்டங்களில் காவேரி நீர் வழங்காத ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்தும் புதுக்கோட்டை ஐ.ஓ.பி பேங்க் முன்பு புதுக்கோட்டை வடக்குமாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டத்தில் சி.பி.ஐ. (எம்) மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், சி.பி.ஐ. மாவட்டச் செயலாளர் த.செங்கோடன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் மாத்தூர் கலியமூர்த்தி, வி.சி.க. மண்டல துணை செயலாளர் திருமாறன், வி.சி.க. மாவட்ட செயலாளர் வெள்ளைநெஞ்சன், இந்திய விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ஜிஎஸ்.தனபதி, கல்லணைக் கால்வாய் விவசாயிகள் சங்க தலைவர் கொக்குமடை ரமேஷ், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் வருவாய் துறையின் சார்பில் விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (13.10.2023) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு(எ) சிதம்பரம், வட்டாட்சியர் புவியரசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.






கலைஞர் 100 1924 - 2023

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்

நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு

கல்வி உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

நாள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில், கிரசன்ட் மைதானம் அண்ணாநகர்

தலைமை

நே.சிற்றரசு M.A., M.Phil., M.C.,

மாவட்ட செயலாளர்

வரவேற்புரை

ச.பரமசிவம் M.A.B.L., அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர்

ந.இராமலிங்கம் MC., அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர்

முன்னிலை

து.விக்டர் / R.N.துரை / வி.எஸ்.கலை / ஏ.சங்கீதா, / ஐ.கென்னடி

ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு / கார்த்திமோகன்

கல்வி உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை

இளைஞர்களின் எழுச்சி நாயகன், மாண்புமிகு

உதயநிதி ஸ்டாலின்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

தயாநிதிமாறன் M.P கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்

அன்பகம் கலை கழக இணை அமைப்புச் செயலாளர்

M.K.மோகன் M.L.A தலைமை செயற்குழு உறுப்பினர்

மருத்துவர் நா.எழிலன் M.L.A கழக மருத்துவ அணி செயலாளர்

எஸ்.இராம்குமார் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில துணை செயலாளர்

பகுதி செயலாளர்கள்

எஸ்.மதன்மோகன் M.C / ARPM காமராஜ் M.C / மா.ப.அன்புதுரை / வினோத் வேலாயுதம்

தலைவர் / துணை அமைப்பாளர்கள்

பி.குப்புசாமி, த.தயாளரங்கன், ஆர்.டி.முத்துகிருஷ்ணன், ஆர்.சிவசாமி

வி.ஆனந்தகுமார், தி.ஆனந்தன், உ.முருகன், கே.குமார், எஸ்.தட்சிணாமூர்த்தி

அன்புடன்:- சி.கே.ரெங்கராஜ். B.E,

மாவட்ட அமைப்பாளர் - அமைப்புசாரா ஓட்டுனர் அணி



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (13.10.2023 ) நடைபெற்ற 9வது G20 உறுப்பு நாடுகளின் நாடாளுமன்ற சபாநாயகர்கள் உச்சி மாநாட்டின் (P20) தொடக்க விழாவில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் கலந்துகொண்டார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி உரிமைத்தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை 12.10.2023 அன்று சென்னை, முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விளையாட்டு அமைப்பாளர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் பார்முலா ரேசிங் சர்க்யூட் விளையாட்டு அமைப்பாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று

# கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கம் கலப்பு உரம் தயாரிக்க அனுமதி!

### ஒன்றிய ரசாயனம் - உர அமைச்சகம் உத்தரவு!

*நாமக்கல், அக். 15 -*

கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி கோரிக் கையை ஏற்று, கோவை துடி யலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கத் தின் கலப்புஉரம் தயாரிப்பு அலகை மத்திய இணைய முகப்பில் பதிவு செய்ய அனுமதி வழங்கி, ஒன்றிய ரசாயணம் மற்றும் உரங்கள் அமைச்சகம் உத்தர விட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கோவை துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங் கம் இயங்கி வருகிறது. இச் சங்கத்தில் ஆயிரக்கணக் கான விவசாயிகள் உறுப்பி னர்களாக உள்ளனர். இச் சங்கம் ஒன்றிய அரசின் அனுமதியோடு நீண்ட கால மாக கலப்புஉரத் தயாரிப்பு செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது. சமீபத்தில் ஒன்றிய அரசு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் உரத் தயா ரிப்பு மையங்கள் அனைத் தும் ஒன்றிய அரசின் இணைய முகப்பில் பதிவு செய்ய வேண்டும் எனவும், அதற்கான பதிவு செய்ய காலக்கெடு முடிவடைந்து நிலையில் துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கத்தினை, பல் வேறு காரணங்களால் இணைய முகப்பில் பதிவு செய்ய முடியாமல் போனது.

இதனையடுத்து, ஒன்றிய அரசின் இணைய முகப்பில் பதிவு செய்ய காலநீட்டிப்பு செய்ய வேண்டும் என துடி யலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கத் தினர் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலா ளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமாரிடம் கோரிக்கை விடுத்து இருந்த னர்.

இதையடுத்து ஒன்றிய குடும்ப நலன், இரசாயனங் கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவியா அவர்களை கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி டில்லியில் சந்தித்து துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்கத்தினரின் கோரிக்கையை எடுத்து ரைத்தார்.

விவசாயிகளின் துயர் துடைக்க ஒன்றிய குடும்ப நல மற்றும் ரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச் சருக்கு கே.ஆர்.என்.இரா ஜேஸ்குமார் எம்.பி எழுதி யுள்ள கடிதத்தில், 1955 ஆம் ஆண்டு முதல் டி யூ இ சி எஸ் என அறியப்படும் துடி யலூர் கூட்டுறவு வேளாண்மை சங்கம் தர மான இடுபொருட்களை வழங்குவதன் மூலம் விவசா யிகளுக்கு சேவை செய்து வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்ட மைப்பு லிமிடெட், தி துடி யலூர் கூட்டுறவு வேளாண்மை சங்கம், என். சி.எம்.எஸ ஆகிய மூன்றும் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் கலப் புஉரம் அலகுகள் ஆகும்.

எருக்கலவைகளை உற் பத்தி செய்ய, இந்தக் கலவை அலகுகள் என்பிகே ஊட்டச்சத்துக்களின் அடிப் படையில் உரக்கலவை களை உற்பத்தி செய் கின்றன. நேரடி உரங்களான யூரியா டி.ஏ.பி,சூப்பர் பாஸ் பேட், எம்.ஒ பொட்டாஷ் போன்றவை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்து றையின் வழிகாட்டுதல் மற் றும் உரிமத்தின் அடிப்படை யில் நேரடியாக கூட்டுறவு சங்கத்தில் இருந்து கொள் முதல் செய்யப்படுகின்றன.

மத்திய ரசாயன மற்றும் உரத்துறையின் வழிகாட்டு தல்படி, ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை அமைப் பின் இணைய முகப்பில் துடியலூர் வேளாண்மை சேவைகள் கூட்டுறவு சங்க கலப்பு உரத் தயாரிப்பு அல கினை பதிவு செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் தொழில்நுட்பக் கோளாறின் காரணமாக இணைய முகப்பில்பதிவு செய்ய சிக்கல் ஏற்பட்டது. எனவே தாங்கள் விவசாயிகளின் நலன் கருதி மாநில ஒருங்கிணைப்பாள ருக்கு சிக்கலைத் தீர்க்க அறி வுறுத்தும் படி கேட்டுக் கொள்கிறேன் என கூறியுள் ளார்.

இதையடுத்து, கே.ஆர். என்.இ ராஜேஸ்குமார் எம். பி யின் இந்த கோரிக்கையை ஏற்று ஒன்றிய ரசாயணம் மற்றும் உரத்துறை அமைச் சர் டாக்டர்.மன்சுக்மாண்ட வியா தமிழ்நாடு விவசாயத் துறை இயக்குனருக்கு வரும் 27 ஆம் தேதி வரை கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கத் தின் கலப்பு உரத் தயாரிப்பு அலகை மத்திய இணைய முகப்பில் பதிவு செய்ய அனுமதி வழங்கி உத்தர விட்டுள்ளார்.

கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி யின் இந்த கோரிக்கையை ஏற்று, கோவை துடியலூர் வேளாண்மை சேவை கூட்டுறவு சங்கத் தின் கலப்பு உரத் தயாரிப்பு அலகை மத்திய இணைய முகப்பில் பதிவு செய்ய அனுமதி வழங்கியுள்ளதால் துடியலூர் கூட்டுறவு விவ சாய சேவா ஸ்தாபனத்தின் ஆயிரக்கணக்கான உறுப்பி னர்கள் அவர்களது குடும் பத் தார் மற்றும் இந்நிறுவ னத்திலிருந்து பயன்பெறும் விவசாயிகள் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலா ளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமாருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.




### இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த

# 21 தமிழர்கள் பத்திரமாக தாயகம் திரும்பினர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

*சென்னை, அக்.15-*

இஸ்ரேல் நாட்டின் போர்ச் சூழலில் சிக்கித் தவித்த 21 தமிழர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஏற்பாட்டால் பத்திரமாக தாயகம் திரும் பியதுடன் அரசின் செல வில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளனர். அவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இதுகுறித்து அயலகத் தமிழர் நலத்துறை வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-

இஸ்ரேல் - பாலஸ்தீ னம் நாடுகளுக்கு இடை யேயான போர் தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில் தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப இயலா மல் அங்கு சிக்கித் தவிக் கின்றனர்.

முதலமைச்சர் அவர்க ளின் உத்தரவின்படி அங் குள்ள தமிழர்களுக்கு உத விடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண் கள் வெளியிட்டு அவர்க ளது விவரங்கள் சேகரிக் கப்பட்டு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ் ரேலில் உள்ள இந்திய தூத ரகத்திடமும் பகிரப்பட்டு அவர்களை தாயகம் மீட் கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் வாட் சப் குழுக்கள் அமைக்கப் பட்டு அங்குள்ளதமிழர்களின் நிலை தொடர்ந்து கண்கா ணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களில் தாயகம் திரும்புவதற்காக பதிவு செய்த நபர்களில் கோயம் புத்தூர், திருவாரூர், கட லூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபு ரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் ஒன்றிய அர சின் ஆபரேஷன் அஜய் திட்டம் மூலம் முதற் கட்டமாக 12.10.2023 அன்று இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு சிறப்பு விமா னத்தில் நேற்று முன்தினம் (13.10.2023) காலை 6 மணிக்கு புது டெல்லி வந் தடைந்தனர்.

புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்பு மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஏற் பாடுகள் செய்யப்பட்டது. மேலும் தமிழ்நாடு அரசு செலவில் விமான பயணச் சீட்டுகள் ஏற்பாடு செய் யப்பட்டு 14 நபர்கள் சென்னை விமான நிலை யத்திற்கும், 7 நபர்கள் கோயம்பத்தூர் விமான நிலையத்திற்கும் வந்த டைந்தனர்.

சென்னை விமான நிலையத்திற்கு வந்த டைந்த 14 தமிழர்களை யும், தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி மற் றும் அயலகத் தமிழர் நலத் துறை ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் ஆகி யோர் வரவேற்று, அவர்க ளது சொந்த ஊர்களுக்கு செல்ல வாகன வசதியும் ஏற்பாடு செய்து தரப் பட்டது.

கோயம்பத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 7 தமிழர்களையும், கோயம் பத்தூர் மாவட்ட ஆட்சி யர் அவர்கள் வரவேற்று அவர்களது சொந்த ஊர்க ளுக்கு அனுப்பி வைத்தார்.



## இந்துக் கோவில்கள் பா.ஜ.க.வின் சொத்து அல்ல!

# தமிழ்நாட்டில் கோவில்களைப் பாதுகாத்து வரும் திராவிட மாடல் அரசு



**கோவை கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.

தமிழ்நாட்டின் இந்து சமய அறநிலையத்துறையின் முறையான செயல்பாட்டில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு பக்தர்கள், ஆலயங்களுக்குச் செல்பவர்கள் 2021 இல் இருந்து இந்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் சிறப்பான செயல்பாடுகள் நடைமுறைகள் பக்தர்களுக்கு குடிநீர் சுகாதாரம் சுத்தம் அன்னதானத் திட்டம் பிரசாதங்கள் வழங்குவது ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் எல்லோருக்கும் ஒரே நிலையான பொறுப்புடன் செயல்படுகிறது இந்து அறநிலையத் துறை.

இப்போது தெலுங்கானாவில் விரைவில் நடைபெறப் போகிற சட்டமன்றத் தேர்தலுக்காக பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு திட்டங்கள் துவக்கி வைப்பதாக அறிவித்திருக்கிறார். அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் திருக்கோயில்கள் அரசால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக ஒரு பிரதமராக இருப்பவர் தமிழ்நாட்டின் மீது வேறொரு மாநிலத்தில் சென்று பேசுகிறார் என்றால் அவருடைய எண்ணத்தில் உள்ளத்தில் தமிழ்நாடு அரசின் மீது எவ்வளவு காழ்ப்புணர்ச்சியோடு எதிர்மறை எண்ணத்தோடு அவர் செயல்படுகிறார் என்பது இது ஒரு உதாரணம்

இந்துமதம் தனியார் யாருக்கும் சொந்தமல்ல.

இந்து மக்கள் வழிபாடுநடத்தும் கோவில்கள் எந்த தனிமனிதச் சொத்தல்ல.

இந்து கோவில்கள் பிஜேபி. யின் சொத்தல்ல.

திருக்கோயில்களின் மதசார்பான நடவடிக்கைகளில் அரசு எப்பொழுதும் தலையிடுவதில்லை. 2021ல் அரசு பொறுப்பேற்ற பிறகு 1077 பெரிய திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 7713 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கால பூஜை செய்வதற்கு கூட நிதி வசதி இல்லாத 17000 திருக்கோயில்களின் ஒரு கால பூஜை செய்திட ரூபாய் 200 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களைப் புனரமைத்திட 200 கோடி ரூபாய் அரசு பணத்தை மானியமாக வழங்கி உள்ளது.

வள்ளலாரின் அவதாரத் திருத்தலமான வடலூரில் உள்ள வள்ளலார் சர்வதேச மையம் அமைக்க ரூபாய் 100 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளது.

ராமேசுவரத்தில் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள 50 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

கன்னியாகுமரி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான திருக்கோவில்கள் பராமரிப்பு செலவுக்கு ரூபாய் 37 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளது.

வள்ளலார் அவர்களின் முப்பெரும் விழா ஆண்டு முழுவதும் நடத்த ரூபாய் 3 கோடியே 25 லட்சம் அரசு வழங்கியுள்ளது.

ராமேஸ்வரம் காசி ஆன்மீகப் பயணச்செலவுக்கு ஒரு கோடியே 21லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாக திருக்கோயில்களில் நியமிப்பதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து உத்தரவைப் பெற்று சட்டப்படி இப்பொழுது தமிழ்நாடு முழுவதும் அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

இந்த நிலைப்பாட்டில் இந்த ஆண்டு ஓராண்டு பயிற்சி பெற்று அர்ச்சகர்களாக மூன்று சகோதரிகளும் பயிற்சி பெற்ற ஓதுவார்களாக 10 சகோதரிகள் தமிழ்நாட்டுக் கோயில்களில் அரசாணை பெற்று பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் 10 திருக்கோயில்கள் சார்பாக கலைக் கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவித்து கொளத்தூர், திருச்செங்கோடு, ஒட்டன்சத்திரம், விளாத்திகுளம் ஆகிய ஊர்களில் கலைக் கல்லூரிகள் துவக்கப்பட்டு அதில் பி.காம் பி.பி.ஏ. பி.சி.ஏ.பி எஸ்.சி.கம்ப்யூட்டர் சயின்ஸ் என்று மாணவ - மாணவியர் படித்து வருகிறார்கள்.

பழனியில் உள்ள பழனியாண்டவர் திருக்கோயில் கலைக் கல்லூரியில் நான்காயிரத்து ஐநூறு மாணவ மாணவியர் படித்து வருகிறார்கள் அவர்களுக்கும் காலை உணவுத் திட்டத்தை கொண்டு வந்து காலை உணவு, மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

754 கோயில்களில் அன்னதான திட்டம் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

8 பெரிய கோயில்களில் முழு நேர தொடர் அன்னதானத் திட்டம் தினசரி 82,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

பழங்குடி மக்கள் பட்டியலின மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களில் 1250 கோயில்களும் கிராமப்புற கோயில்களில் 1250 கோயில்களும் மொத்தமாக ஆண்டுக்கு 2500 கிராம புறத்து கோயில்களில் பராமரிப்பு திருப்பணி செய்து கொள்ள ஆண்டுக்கு இரண்டு லட்சம் ரூபாய் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டு முறையாக நிதி கொடுக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களின் வருவாய் அரசால் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அதற்கு மாறாக மேலே தெரிவித்துள்ள திருக்கோயில்களின் வளர்ச்சிக்காகவும் பராமரிப்புக்காகவும் திருப்பணிகளுக்காகவும் அரசால் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருக்கோயில்களின் மதச்சார்பற்ற பணிகளை முறைப்படுத்திட சட்டம் இயற்றுவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள இந்து அறநிலையத் துறை கோயில்கள் திருப்பணிகள் செய்வதற்கும் கோயில் சொத்துகளைப் பாதுகாப்பதற்கு நிதியை முறையாக சேமித்து வைப்பதற்கும் இந்த கோயில் நிதியிலிருந்து வேறு எந்த நடைமுறைக்கும் செயல்படுத்த முடியாத அளவுக்கு இந்து அறநிலையத்துறைச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

இது தெரியாமல் இந்து கோயில்களின் சொத்துகளை தமிழ்நாடு அரசு ஆக்கிரமிப்பு செய்துள்ளது போல் ஒரு மாயை தோற்றத்தை பிரதமர் மோடி அவர்கள் கூறியது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

தமிழ்நாட்டின் 2021 ல் அரசு பொறுப்பு ஏற்ற பிறகு 5774 ஏக்கர் நிலங்களை சுமார் 5379 கோடி மதிப்புள்ள நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டு அந்தந்தக் கோவிலுக்கு சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் ரோவர் கருவி மூலம் நீளம் அளக்கப்பட்டு சுமார் 1.51.000 ஆயிரம் ஏக்கர் கோவில் நிலம்கண்டு பிடிக்கப்பட்டு கோயில் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

10 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் பட்டா சிட்டாக்களை எல்லாம் மாற்றி கோவில் நிலங்களை ஆக்கிரமித்தவர்களிடமிருந்து மீட்டு அந்த பட்டா சிட்டா எல்லாம் கோவில் பெயருக்கு மீண்டும் மாற்றப்பட்டு இப்பொழுது கோவில் நிலங்களாக உபயோகத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக் கோவில்களில் இதற்கு முன்பிருந்த ஆட்சியினர் நிலவாடகைகள் கட்டிட வாடகை குத்தகை எல்லாம் வசூலிக்காமல் விட்டு விட்டார்கள்.

கழக அரசு ஆட்சிக்கு வந்ததும் சட்டப்படி 2021 இல் இருந்து கடுமையான நடவடிக்கை எடுத்து குத்தகைத் தொகை, கட்டிட வாடகைத் தொகை எல்லாம் நானூறு கோடி ரூபாய் வசூல் செய்து அந்தந்தக் கோயில் உடைய தொகையை அந்தந்தக் கோயில் நிதி நிலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் கோயில் கட்டுவதற்காக நிலம் வாங்கிய முக்கிய பிரமுகர்கள் சிலர் தனியார் பெயரில் நிலங்களை குறைந்த விலையில் வாங்கி அதிக விலைக்கு கோயில் நிர்வாகிக்கு விற்றதில் பல கோடி ரூபாய் மோசடி நடந்ததாக சிஏஜி அறிக்கையில் கூறியுள்ளது. அதற்கு இதுவரை எந்த பதிலும் பிரதமர் அலுவலகத்தில் இருந்தும் கூறவில்லை. பிரதமரும் கூறவில்லை.

இந்துக் கோயில் சொத்துகளை மீட்போம் என்று அரசு கட்டுப்பாட்டில் அரசு துறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் நிர்வகிக்கப்படுகிற ஒரு துறையை தனியாரிடம் கொடுத்தால் அந்த சொத்துகள் என்ன ஆகும் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்பொழுது தமிழ் நாட்டில் ஏராளமான இடங்களில் கோயில் சொத்துக்களை அபகரித்து வைத்திருந்தவர்களிடமிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம் இன்னும் மீட்கப்பட வேண்டிய சொத்துகள் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. குறிப்பாக ஒரு சில மீட்கப்பட்ட சொத்துகளை யார் அபகரித்து வைத்திருக்கிறார்கள் வைத்திருந்தார்கள் என்கிற பட்டியலை வெளியிட்டு இருக்கிறோம்.

புகழ் பெற்ற சோமநாதீஸ்வரர் கோவில் அறங்காவலர் குழு தலைவராக பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் அறங் காவலர்களாக எல்.கே.அத்வானி அவர்களும் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களும் இருந்து வருகின்றனர் அந்த கோவிலும் கோவில் சொத்துகளையும் முதலில் மீட்டு எடுத்து வாருங்கள்.

இந்தியா பல மத மொழி பேசுகிற மக்கள் வாழும் நாடு, ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் வாழும் நாடு அல்ல என்பதை மறந்து விட்டு பிரதமர் அவர்கள் பேசுவது நியாயமா என்பதை அவர் தெரிந்து பேச வேண்டும். அரசு செயல்படுத்தும் நிலைப்பாடுகள் என்பவை குறிப்பாக, திருக்கோயில்களில் தினசரி பூஜைகள் மற்றும் திருவிழாக்கள் தடையின்றி நடந்திட பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் தானமாக வழங்கப்பட்டு கோயில்களை நிர்வகித்து வந்த அர்ச்சகர்கள் மற்றும் அறங்காவலர்களால் செயல்பாட்டுக்கு வந்தது

அதில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதால் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்திட ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே 1817 ஆம் ஆண்டிலேயே ஒழுங்குமுறை சட்டங்கள் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் பலமுறை சட்டங்கள் திருத்தப்பட்டு 1927 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய வாரியம் ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துகள் மற்றும் நிதிகள் தவறாக பயன்படுத்துவதாக வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் சி.ஆர்.தாஸ் தலைமையில்அமையப் பெற்ற சட்ட ஆணையம் இதற்கென தனியாக சட்டம் இயற்றலாம் என 1950 ஆம் ஆண்டில் பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் 1951 ஆம் ஆண்டில் மதராஸ் ஹிந்து சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் இயற்றப்பட்டு தனியாக இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது.

அதன் பின்னர் 1959வது ஆண்டு புதிதாக புதிய சட்டம் இயற்றப்பட்டு தற்போது வரை நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்து அறநிலையத்துறையில் அரசு தனிப்பட்ட எந்த முறையில் தலையீடு இல்லாமல் முறையாக தன்னிச்சையாக எல்லா ஆலயங்களிலும் செயல்பட்டு வருகிறது.

பிரதமர் கூறுவது போல் எந்த ஆக்கிரமிப்பும் இல்லாத நிலையில் கோயில் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கோயில் சொத்துக்களில் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்து அடாவடித்தனமாக கையகப்படுத்தி அதை சொந்தம் கொண்டாடி வந்தவர்கள் பாரதிய ஜனதா கட்சியினரும் இந்து மகாசபை என்ற பெயரில் செயல்படுபவர்களும்தான் என்பதனைத் தெரிவிப்பதோடு சில ஆக்கிரமிப்புகள் பட்டியல் இதோ:-

திருவண்ணாமலை நகரத்தில் அம்மணி அம்மாள் மடம் என்ற பெயரில் கையகப்படுத்தி அபகரித்து 18 /3 /2023 அன்று வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உதவியுடன் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு கையகப் படுத்தப்பட்ட சுமார் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தச் சொத்து கோயிலுக்கு சேர்க்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் நிலத்தை பா.ஜ.க.வைச் சேர்ந்த சூரிய நாராயணன் என்பவர் கையகப்படுத்தி ஆக்கிரமிப்பு செய்த பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கீழ்பாக்கம் ஏகாம்பரநாதர் கோவிலுக்குச் சொந்தமான இடம் 24.7.2021 அன்று ஆக்ரமிப்பில் இருந்து மீட்கப்பட்டது.

ஸ்ரீகண்டன் என்று இந்து மகாசபா என்ற அமைப்பினைச் சேர்ந்தவரால் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோவிலுக்குச் சொந்தமான 1399சதுர அடிநிலம் ஆக்கிரமித்து இருந்த இந்த இடமும் மீட்க பட்டு கோவில் நிலமாக மாற்றப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் பத்ரகாளியம்மன் திருக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தை பாரதி அமைப்பிடம்இருந்து ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டு கோவிலுக்குச் சேர்க்கப் பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலை பால சுப்ரமணிய சுவாமி கோவிலுக்குச் சொந்தமான இடத்தை ஆலய முன்னேற்ற சங்கத்தினரின் ஆக்கிரமிப்பிலிருந்து இடத்தை மீட்டு கோயில் சொத்தாக மாற்றப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் பகவதி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை இந்து பரிசத் அமைப்பை சேர்ந்த வேதாந்தம் என்பவரிடமிருந்து மீட்கப்பட்டு கோவில் சொத்தாக மாற்றப் பட்டுள்ளது.

சென்னை முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் சொந்தமான சொத்தினை பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் ஆக்கிரமிப்பு செய்திருந்தார் அதை மீட்டு மீண்டும் கோயிலுக்கு மாற்றி சுமார் 5,395 சதுர அடி இடமும் கட்டிடமும் மீட்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் பசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தை பா.ஜ.க. கட்சி அமைப்பினைச் சேர்ந்த ராதா என்பவர் ஆக்கிரமித்து இருந்தார் அந்த இடமும் மீட்கப்பட்டு கோயில் சொத்தாக மாற்றப்பட்டுள்ளது.


பாரதிய ஜனதா கட்சியின் நகரச் செயலாளர் கடலூர் மாவட்டம் இராமச்சந்திரன் என்பவர் ஆக்கிரமித்து வைத்த பண்ருட்டி நகரம் லட்சுமி அம்மாள் கட்டளைக்குச் சொந்தமான ரூபாய் 100 கோடி மதிப்புள்ள கோவில் சொத்து மீட்கப்பட்டுள்ளது

இப்போது தமிழ்நாடு முழுவதும் இந்து அறநிலைத்துறைக்கு கோவிலுக்குச் சொந்தமான இடங்களைக் கையகப்படுத்தி தங்களது சொத்துகளாக பாவித்து வந்தவர்களிடமிருந்து மீட்டு கோவிலுக்கு சேர்த்துள்ளது இந்த அரசு என்பதனை பிரதமர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நுாட்டின் ஒட்டுமொத்த மக்களும் 85%சதவீத இந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி தான் திராவிட மாடல் ஆட்சி. இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தனிப்பட்ட முறையில் யாராலும் நியமிக்கப்பட்ட அரசு அல்ல மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் ஆறாவது முறையாக தி.மு.க. ஆட்சிக்கு வந்துள்ளது.

இந்திய துணை கண்டத்தில் பா.ஜ.க. செய்த சுமார் ஏழரை லட்சம் கோடி ரூபாய் மோசடி ஊழலை மறந்து விட முடியுமா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை வேறு எங்கோ ஒரு மாநிலத்தில் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் தமிழ் நாட்டைப் பற்றி தவறாக பேசுவதும் சம்பந்தம் இல்லாமல் பேசுவதும் ஒரு அரசியல் கட்சி பொதுக்கூட்டத்தில் சாதாரண ஒரு பேச்சாளர் பேசுவது போல் பிரதமர் பேசுவதும் நியாயமாக இருக்கிறதா?


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழா முன்னிட்டு
நே.சிற்றரசு M.A.,M.Phil
மாவட்ட செயலாளர், சென்னை மேற்கு மாவட்டம்
அவர்களின் தலைமையில் நடைபெறும்
1000-நபர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும்
நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
வருகை தரும்...
இளைஞர்களின் எழுச்சி நாயகன்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்...

தயாநிதி மாறன் MP.
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
அன்பகம்கலை
கழக அமைப்பு இணை செயலாளர்
மருத்துவர் நா.எழிலன் MLA.
கழக மருத்துவ அணி செயலாளர்
எம்.கே.மோகன் MLA.
தலைமை செயற்குழுஉறுப்பினர்
ந.இராமலிங்கம் MC. எஸ்.மதன்மோகன் MC. ARP.M.காமராஜ் MC.
ச.பரமசிவம் வினோத் வேலாயுதம்
நுங்கை வி.எஸ்.ராஜ் கலைகதிரவன்

மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்.
மா.பா.அன்புதுரை
பகுதி செயலாளர்
ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க

# இந்திய ஒன்றியத்திற்கே முன்மாதிரியான திட்டங்களை வகுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## மாநிலக் கல்லூரி இலக்கிய ஆய்வரங்கில்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக்.15

**சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞரின் தொலைநோக்குத் திட்டங்களால் தமிழ்நாடு அடைந்த பயன்கள் - கண்காட்சி மற்றும் இலக்கிய ஆய்வரங்கத்தை கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்து உரையாற்றினார்.**



அப்போது அவர் பேசியதாவது:

“இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்று கண்காட்சியைத் துவங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். தன்னுடைய சிந்தனையாலும், நிர்வாகத் திறனாலும், மக்கள் நலத் திட்டங்களாலும் தமிழ்நாட்டைத் தலை நிமிரச்செய்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் இந்திய ஒன்றியத்திற்கு ஒரு முன்மாதிரியாகப் பல முன்னோடித் திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செயல்படுத்தினார்கள். பள்ளிக்கூடங்களைக் கட்டுவது, பஸ் போக்குவரத்து, சாலை வசதி செய்வதையெல்லாம் யார் வேண்டுமானாலும் செய்யலாம். எந்த ஆட்சியாக இருந்தாலும் செய்யலாம். அது எல்லாருடைய ஆட்சியிலும் தானாக நடந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் சீர்திருத்தங்கள்? அப்படி தமிழ்நாட்டைச் சீர்திருத்தங்களால் செதுக்கியவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்தவர் கலைஞர்!

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் அவருடைய பங்களிப்பு இருக்கும். அது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்துக்கே ஒரு முன்னோடித் திட்டமாக இருந்திருக்கிறது. அடுத்த 50 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு எப்படி இருக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அந்தத் தொலைநோக்குப் பார்வை தமிழ்நாட்டில் ஆட்சி நிர்வாகத்தில் மட்டுமின்றி, சமூக அரசியல் தலங்களிலும் நாட்டிற்கு வழிகாட்டியாக இருந்துள்ளது. அதற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்கத் திட்டங்களை, முக்கியமான சில திட்டங்களை மட்டும் இந்த மேடையிலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

குடிசைகள் இல்லா தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், 1971ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை, இந்தியாவிலேயே முதன் முறையாக உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

இந்தியாவில் இன்னும் சில மாநிலங்களில் கை ரிக்ஷா இழுக்கும் அவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதை தமிழ்நாட்டில் 1973ஆம் ஆண்டே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒழித்தார்கள்.

1974ஆம் ஆண்டு இந்தியாவில் பதவி வகிக்கும் அனைத்து மாநில முதலமைச்சர்களும் சுதந்திர தினத்தன்று கோட்டையிலே கொடியேற்றலாம் என்ற உரிமையைப் பெற்றுத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ரேஷன் பொருட்களை வழங்க இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை உருவாக்கியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### பேருந்துகளை அரசுடைமையாக்கினார்!

தமிழ்நாட்டில் தனியாரிடமிருந்த பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியதும் முத்தமிழறிஞர் கலைஞருடைய அரசுதான்.

1989ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல்முறையாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டத்தை இயற்றியது கலைஞர் அவர்களின் தலைமையிலான நம்முடைய கழக அரசுதான். அது மட்டுமல்ல, உள்ளாட்சித் தேர்தல்களில் மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கி அதிகாரப் பணிகளில் பெண்களை அமரச் செய்ததும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான்.

> **அரசியல், சமூகம், பொருளாதாரம் என எந்த அளவுகோலை எடுத்தாலும் அதில் முத்தமிழறிஞர் கலைஞருடைய சாதனைகள் தொலைநோக்குப் பார்வையுடன் அமைந்த ஒன்றாகத்தான் இருக்கும். அதனால்தான் தமிழ்நாடு இன்றைக்கு இந்திய மாநிலங்களிலேயே தலைசிறந்த மாநிலமாக உயர்ந்திருக்கின்றது.**
>
> **கலைஞர் அவர்களின் வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு ஏராளமான திட்டங்களை, கலைஞர் அவர்கள் விட்ட இடத்திலிருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். கலைஞர் மகளிருக்கு சொத்தில் உரிமை கொடுத்தார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் கொண்டு வந்தார்.**

பெண்கள் தற்சார்புடனும், உரிமையுடனும் வாழ வழி தந்துள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை தமிழ்நாட்டில் முதல்முறையாக உருவாக்கியதும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சியில்தான்.

தகவல் தொழில்நுட்பத் துறைக்கென இந்தியாவில் முதன்முறையாக ஒரு கொள்கையை அறிவித்ததும் கலைஞரின் தலைமையிலான நம்முடைய கழக அரசுதான்.

### தொழிற் பூங்காக்கள் உருவாக்கியவர் கலைஞர்!

மேலும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், டைடல் பார்க், சிப்காட் தொழிற் பூங்காக்கள் போன்றவற்றை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள்.

சாதி பேதமற்ற சமூகத்திற்கான இலக்குடன் தமிழ்நாடு முழுவதும் `பெரியார் நினைவு சமத்துவபுரங்களை' உருவாக்கி, மாவட்டங்கள் மட்டுமின்றி இந்த மாநிலமே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்று உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கடந்த ஆண்டு குஜராத் மாநிலத்தில் ஒரு கல்லூரியின் திறப்பு விழா ஒரு மருத்துவக் கல்லூரியின் திறப்பு விழாவில், நம்முடைய ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பேசும்பொழுது, அவர் சொல்லி இருக்கிறார் நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று சென்ற ஆண்டு ஒன்றிய பிரதமர் பேசியிருக்கிறார்.

ஆனால், இதை நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டிலேயே கலைஞர் தலைமையிலான நம்முடைய கழக அரசு அனைத்து மாவட்டத்திற்கும் ஒரு மருத்துவக் கல்லூரி உருவாக்கியவர் தான் நம்முடைய கலைஞர் அவர்கள்.

பன்னிரண்டாம் வகுப்பு படித்து, பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட படிப்புகளுக்குச் சேர அன்று இருந்த நுழைவுத்தேர்வுகளை ரத்து செய்த முதல் முதலமைச்சர் இந்தியாவிலேயே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

### ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கியவர்!

`ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்', `இலவச பஸ் பாஸ்', `விலையில்லா வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி', `கலைஞர் காப்பீட்டுத் திட்டம்', `கலைஞர் வீடு வழங்கும் திட்டம்', `முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குக் கல்விக் கட்டணம்' ரத்து என எண்ணில் அடங்காத திட்டங்களை இந்திய ஒன்றியத்திற்கே அறிமுகம் செய்து வைத்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அரை நூற்றாண்டு காலம் தமிழ்நாட்டு அரசியலில் மையப்புள்ளியாக இருந்து தனது தொலைநோக்குத் திட்டங்களால் நவின தமிழகத்தை உருவாக்கிய கலைஞரின் சாதனைகளை எந்நாளும் இந்தச் சின்ன நிகழ்ச்சியிலே, ஒரு மேடையிலே நாம் பேசிவிட முடியாது.

அரசியல், சமூகம், பொருளாதாரம் என எந்த அளவுகோலை எடுத்தாலும் அதில் முத்தமிழறிஞர் கலைஞருடைய சாதனைகள் தொலைநோக்குப் பார்வையுடன் அமைந்த ஒன்றாகத்தான் இருக்கும். அதனால்தான் தமிழ்நாடு இன்றைக்கு இந்திய மாநிலங்களிலேயே தலைசிறந்த மாநிலமாக உயர்ந்திருக்கின்றது.

கலைஞர் அவர்களின் வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு ஏராளமான திட்டங்களை, கலைஞர் அவர்கள் விட்ட இடத்திலிருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். கலைஞர் மகளிருக்கு சொத்தில் உரிமை கொடுத்தார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் கொண்டு வந்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் மகளிர் மாதம் ரூபாய் 1000 பெறுகின்றார்கள்.

இந்தத் திட்டம் இன்றைக்கு இந்திய ஒன்றியத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது. கலைஞர் அவர்கள் பெண்களுக்குக் கட்டணமில்லா கல்வி தந்தார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெண் கல்வியை ஊக்குவிக்க `புதுமைப்பெண் திட்டத்தின்' கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் உதவி தொகை அளித்து வருகின்றார்கள்.

### காலை உணவுத்திட்டம்!

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் அரசுப் பள்ளிகளில் படிக்கக்கூடிய ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் காலை உணவுத் திட்டம்.

கிட்டத்தட்ட 31,000 பள்ளிகளில் 17 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகிறார்கள். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி, மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டம், விளையாட்டு வீரர்களுக்குத் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை,

சுகாதாரத்திற்கு `மக்களைத் தேடி மருத்துவம்', `கலைஞர் நூற்றாண்டு நூலகம்', `கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை' என கலைஞருடைய மறு உருவமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

இந்த மாநிலக் கல்லூரியில் நான் எந்த நிகழ்ச்சிக்கு வந்தாலும், ஒரு திட்டத்தை உங்களுக்கெல்லாம் கொடுக்கின்றேன் என்று அந்தக் கல்லூரி முதல்வர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எத்தனையோ திட்டங்கள் வந்தாலும், அத்தனை திட்டங்களுக்கும் முத்தாய்ப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

### சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் சிலை!

இந்த மாநிலக் கல்லூரியில் சமூக நீதிக் காவலர் நம் கலைஞருடைய மிக மிக நெருங்கிய நண்பர் வி.பி. சிங் அவர்களுடைய சிலை இங்கு அமைய இருக்கின்றது. அதற்கு இந்த நேரத்தில் இந்த மாநிலக் கல்லூரிக்கு ஒரு மிகப்பெரிய பெருமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேடி கொடுத்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு பேச்சாளர்கள் பல்வேறு தலைப்புகளில் பேச இருக்கிறார்கள். எனவே இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு அவர்களின் பேச்சை எல்லாம் கேட்க வேண்டும் என்று ஆசைதான்.

அண்ணன் கலைராஜன் அவர்கள் சொன்னதைப் போல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 20 விளையாட்டு வீரர்களுக்கு, அவர்கள் வெற்றிபெற்ற 28 பதக்கங்களுக்கு ஊக்கத்தொகையும் பாராட்டு விழாவும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று மாலை 6.30 மணி அளவில் அவருடைய தலைமையில் நடக்க இருக்கின்றது.

எனவே அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வளவு விரைவாக இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து விட்டு நான் செல்ல இருக்கின்றேன்.

எனவே, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நடத்திய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு அமைச்சர் அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், அண்ணன் கலைராஜன் அவர்களுக்கும், இலக்கிய அணியைச் சார்ந்த அனைத்து நிர்வாகிகளுக்கும், இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து மாணவச் செல்வங்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி மையத்தின் தலைவர் ராஜேஷ், எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வன், திரைப்பட இயக்குநர் ரத்னகுமார், எழுத்தாளர் இமையம், கவிஞர் வெண்ணிலா, கல்லூரி முதல்வர் ராமன் ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து பல்வேறு தலைப்புகளில் உரை நிகழ்த்தினர். திராவிட இலக்கிய ஆய்வு மாணவர் கதிரவன் அண்ணாமலை, மாநிலக் கல்லூரி மாணவி செல்வி. பிரியதர்ஷினி ஆகியோரும் கலைஞரின் வசனங்களையும் கவிதைகளையும் வாசித்துக்காட்டினர்.

முன்னதாக கழக இலக்கிய அணியின் சார்பில் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு ‘கலைஞரின் வாழ்க்கை வரலாறு’ மற்றும் ‘சிந்தனையும் செயலும்’ ஆகிய புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை மாவட்டக் கழகச் செயலாளரும், மாநகராட்சி நிலைக் குழுத் தலைவருமான சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஐட்ரீம்ஸ் மூர்த்தி, எபிநேசர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி.கனகராஜ், பகுதிக்கழக செயலாளர்கள் மதன்மோகன், காமராஜ், மாநில இணைச் செயலாளர் நந்தனம் நம்பிராஜன் உள்ளிட்ட இலக்கிய அணி நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக இலக்கிய அணியின் மாநிலச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.பி.கலைராஜன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நிலக்கோட்டை ஆ. முனியாண்டி
### அக்டோபர் 15 (1992)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள தனது சொந்த ஊரான விளாம்பட்டியில் கழகக் கிளையை துவக்கி, அப்பகுதி முழுவதும் கழகத்தை வளர்த்தவர்.

திண்டுக்கல் மாவட்ட துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1962–ல் நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்திலும், 1963–ல் மதுரையில் இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு 2 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தவர்.

நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


## பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறை

கலைஞர் 100 1924 - 2023

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1 / 4748 /2023

**இரு உறை முறையில்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்திற்கான தகுதியுள்ள வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | ம.நீ.வ.து.ந.க.எண்.பி1 / 4748 /2023 மண்டலம் - 1, 2, 3, 5, 7, 12, 13, 14 மற்றும் 15ல் உள்ள குளங்களை மேம்படுத்தி புனரமைக்கும் பணி (5 சிப்பங்கள்) | ரூ.126.41 முதல் ரூ.363.34 | பணியின் அலுவலக மதிப்பில் 1% | வகுப்பு - 1 |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 02.11.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 03.11.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 5606 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)**


## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் கிழக்கு மாவட்டம், சேலம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் **டி.மாணிக்கம்** அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை இன்று முதல் ரத்து செய்யப்பட்டு, சேலம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## கழகத் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### தீர்மானக் குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!


தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கழக தீர்மானக்குழு சார்பாக மிகச்சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென ஏற்கனவே நடந்த கலந்தாலோசனைக் கூட்டங்களில் முடிவெடுக்கப்பட்டது.

கழக தீர்மானக்குழு சார்பாக வரும் 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னையில் நடத்தப்படும் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற கழக இளைஞர் அணிச் செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இசைவு தந்துள்ளார்.

அந்த விழாவினைச் சிறப்புற நடத்திடுவது பற்றிய தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வரும் 17.10.2023 செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு தீர்மானக்குழு தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில், சென்னை அண்ணா அறிவாலய அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் மாநில தீர்மானக்குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மீ.அ.வைத்தியலிங்கம்** **கீரை.விஸ்வநாதன்** **அக்ரி.கே.பி.டி.கணேசன்**

மாநில தீர்மானக்குழுச் செயலாளர்கள்



தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின், முத்தான திட்டமான "உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதி, குன்னூர் நகராட்சி, மவுண்ட்ரோடு பகுதியில் மல்டி லெவல் கார் பார்க்கிங் அமைப்பதற்கான இடத்தினை தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். உடன் குன்னூர் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி, பொதுக்குழு உறுப்பினர், குன்னூர் நகர மன்ற தலைவர் ஷீலா கேத்தரின், தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர், நகர மன்ற துணை தலைவர் பா.மு வாசிம் ராஜா, மாவட்ட பிரதிநிதி மணிகண்டன் எம்.சி. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், பத்மநாபன்,மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் முருகக்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் தலைவர் ஜாஹிர் உசேன் எம்.சி., நகரமன்ற உறுப்பினர்கள் சையது மன்சூர், குமரேசன், ராபர்ட், நகர அவைத்தலைவர் தாஸ், நகர துணை செயலாளர் முருகேசன், கிளை செயலாளர் அப்துல் காதர், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பிரவீன், சந்தீப், மது, மகாலிங்கம், ஸ்ரீதர், சதீஷ், சாஜு, ஆகியோர் கலந்துகொண்டனர்.



திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி முன்னாள் அதிபரும் முதல்வருமான முனைவர் ஜான் பிரிட்டோ இயற்கை எய்தினார். இந்தச் செய்தியை அறிந்ததும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி புனித செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு சென்று அங்கு அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். இயேசு சபையின் அருட் சகோதரர்களுக்கும், கல்லூரியின் பேராசிரியர், மாணவர்கள் ஆகியோருக்கு தனது ஆறுதலை தெரிவித்துக் கொண்டார் . உடன் மாநகர கழகச் செயலாளர் மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் மோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி!

# மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு தலா ரூ.7.20 இலட்சத்தில் செயற்கை கால் உபகரணங்கள்!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை. அக்.15-

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 12.10.2023 அன்று முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னையில் நடைபெற உள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டிக்காக முதற்கட்டமாக ரூ.15 கோடி உரிமைத் தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை வழங்கி, மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை கால்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சென்னையில் டிசம்பர் 9 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள ஃபார்முலா ரேஸிங் சர்க்யூட் 2023 போட்டியினை நடத்திட முதற்கட்ட மாக ரூபாய் 15 கோடி உரிமைத்தொகை மற்றும் செயல்பாட்டுத் தொகையினை 12.10.2023 அன்று சென்னை, முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விளையாட்டு அமைப்பாளர்களிடம் வழங்கினார்.

இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸ் வரலாற்றில் சிறப்பு நிகழ்வாக, பெருநகர சென்னை மாநகராட்சி(GCC), சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (CMDA), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT). ரேஸிங் ப்ரோமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றின் சார்பில் இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் தலைநகரான சென்னையில் "சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்" நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டிக்கான அறிமுகக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2023 அன்று நடத்தப்பட்டது. இந்தியாவில் முதல் முறையாக சாலைகள் வழியாக நடத்தப்படுகின்ற மிகப்பெரிய மோட்டார் ரேஸ் இதுவாகும்.

சென்னை ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் F4 போட்டியானது, இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேஸிங் லீக் ஆகியவை சென்னை மாநகரில் தீவுத்திடல் மைதானத்திலிருந்து 3.5 கி.மீ சுற்றளவில் இரவுப் போட்டியாக (Street Circuit) நடத்தப்படுகிறது. இந்தச் சிறப்புமிக்க போட்டியில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு சார்பில் இந்தப் போட்டியினை தமிழ்நாட்டில் நடத்துவதற்காக ரூபாய் 40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் ரூ.15 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களான கே.ராஜேஷ் மற்றும் கே.கலைச்செல்வன் ஆகிய இருவருக்கும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் தலா ரூ.7.20 இலட்சம் மதிப்பில் செயற்கை கால்களுக்கான உபகரணங்களை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக, துருக்கி நாட்டின் இஸ்தான்புல்லில் 18.05.2023 முதல் 21.05.2023 வரை நடைபெற்ற 2023ஆம் ஆண்டிற்கான WAKO உலகக் கோப்பை கிக்பாக்ஸிங் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சார்ந்த எஸ். பரத் விஷ்ணு (பழைய கேடட்ஸ் 32 கிலோ பிரிவு) மற்றும் ஐந்தாம் இடம் பெற்ற எம்.கோகுலகிருஷ்ணன் மற்றும் எஸ். அஷ்வின் (இளைய கேடட்ஸ் 47 கிலோ பிரிவு) ஆகியோர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, கிக்பாக்சிங் சங்க நிர்வாகிகள் மற்றும் பார்முலா ரேசிங் சர்க்யூட் விளையாட்டு அமைப்பாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழுப்புரம் தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், குமளத்தில் நடைபெற்ற வளையலணி விழாவில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா. இலட்சுமணன் கலந்து கொண்டார். உடன் ஆர்.எஸ்.வாசன், வி.ஜி.பிரபாகரன், பணிமொழி செல்வரங்கம், இரா.கேசவன், பக்தவச்சலம், சரண்யா விஜய சங்கர், ஜெ.செல்வி, Dr.ஆர்த்தி, கனகராஜ், மதியழகன், இளவரசன், ராஜசேகர், குமார், நன்னாடு முத்துசாமி, கருணாநிதி,ஆர்.முருகன், அண்ணாமலை, குமரன், மோகன், முத்தமிழன், ஆறுமுகம், ஆர்.ராஜசேகரன், ராமநாதன், துளசிதரன், ராஜாமணி, முத்துசாமி, விஜயசங்கர், தீர்த்தமலை, முத்து கிருஷ்ணன், ரவி, வடமலை, ஆனந்த், ராம்குமார், திருநாவுக்கரசு மற்றும் பலர் உள்ளனர்.





ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி கோபி கரட்டடிபாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்த குமார், எஸ்.ஜேயால், இன்பா ஏ.என்.ரகு, நா. இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா ஆகியோர் முன்னிலை ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் வடக்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் ஏற்பாட்டில் நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதுபோது கோபிசெட்டிபாளையம் நகர தி.மு.க. செயலாளர் என்.ஆர்.நாகராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சிறுவலூர் எஸ்.எஸ்.வெள்ளிங்கிரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் முயற்சியால்

# 40 ஆண்டுகளுக்கு பின் இந்தியா, இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து!

## நாகையில் தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!



*நாகை. அக்.15-*

*இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன் துறைமுகத்திற்கு கப்பல் (படகு) போக்குவரத்து தொடங்க கடந்த 21.9.2023 அன்று நாகை துறைமுகத்தில் நடைபெற்று வரும் பணிகள் ஆய்வு மற்றும் நாகை (இந்தியா) காங்கேசந்துறை (இலங்கை) இடையே பயணியர் படகு போக்குவரத்து தொடங்குதல் தொடர்பான ஆய்வை நாகை துறைமுகத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மேற்கொண்டார்.*

*ஆய்வின் போது கப்பல் நாகை துறைமுகத்திற்கு வந்து செல்ல கடலை ஆழப்படுத்து பணியை தொடங்கி வைத்த பின்னர் இந்திய கப்பற்படைக்கு சொந்தமான படகில் சென்று துறைமுகம் மற்றும் கப்பல் வந்து செல்லும் பகுதியை கடலுக்கு சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதையடுத்து நாகை துறைமுகம் அழப்படுத்தப்படும் பணி நடைபெற்றது. இதையடுத்து கேரளா மாநிலம் கொச்சினில் உருவாக்கப்பட்ட செரியபாணி என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல் நாகை துறைமுகத்திற்கு கடந்த 7ம் தேதி வந்தடைந்தது. இதையடுத்து 8ம் தேதி நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு சோதனை ஓட்டம் நடத்தப்படடது. இதையடுத்து நேற்று 14ம் தேதி நாகையில் இருந்து காங்கேசன் துறைக்கு கப்பல் போக்குவரத்து தொடங்க விழா நடைபெற்றது.*

*இந்த விழாவில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டத்துறை அமைச்சர் எஸ்,ரகுபதி, ஒன்றிய துறைமுகங்கள், ஒன்றிய கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழிகள் துணை அமைச்சர் சர்பானந்தாசோனாவால், நாகை நடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மற்றும் அரசு துறை உயர் அதிகாரிகள் கொடி அசைத்து வைத்து இந்தியா, இலங்கை இடையிலோயான கப்பல் போக்குவரத்தை தொடங்கி வைத்தனர்.*

*இவ்விழாவில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-*

*நாகப்பட்டினத்தை பற்றி பேசுகிற போது கி.மு.3ம் நூற்றாண்டிலேயே பர்மா நாட்டின் வரலாற்றிலேயே நாகப்பட்டினத்தை பற்றி பர்மா நாட்டிலே எழுத்தப்பட்டுள்ளது. அப்படி பட்ட புகழ்பெற்ற புத்த விகாரம் என்கின்ற அடிப்படையில் அங்கு குறிப்பேடு அங்கு இருக்கிறது. அப்படி புகழ் பெற்று இருக்கின்ற இந்த நாகப்பட்டினத்தில் இன்று பயணிகள் செல்கின்ற அளவிற்கு ஒரு கப்பலை இயக்க வேண்டும் என்று முதலமைச்சர், திராவிட மாடல் ஆட்சி செய்யும் தளபதி அவர்கள் பல்வேறு நிலைகளில் ஒன்றிய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்து அடிப்படையில் இந்த பயணிகள் போக்குவரத்து கப்பலை தொடங்குவதற்காக ஒன்றிய அமைச்சர் சர்பானந்தாசோனாவால் வந்திருக்கிறார். நான் பல முறை நேரடியாக அவரிடம் வழியுறுத்தினேன். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னாள் நாகப்பட்டினத்தில் இருந்து சிங்கப்பூருக்கும், இலங்கைக்கும் கப்பல் போக்குவரத்து இருந்தது. நாகப்பட்டினத்தில் இருந்து கப்பல் போக்குவரத்து இருந்ததால் தான் ஒன்றிய அரசாங்கத்திடம் தமிழ்நாடு முதலமைச்சர் சார்பில் வலியுறுத்தப்பட்டு இந்த துறையின் செயலாளராக உள்ள ராமச்சந்திரன் உரிய நேரத்தில் அமைச்சரிடம் எடுத்து சொல்லி இந்த கப்பல் விட பெரிதும் உதவியாக பாலமாக இருந்து பணியாற்றியுள்ளார். தமிழ்நாடு அரசின் சார்பில் துறை செயலாளர் ராமச்சந்திரனுக்கும், தொடங்கி வைக்க வந்துள்ள ஒன்றிய அரசின் அமைச்சர் சர்பானந்தா சோனாவாலுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோன்.*

**பிரதமருக்கு நன்றி!**

*இந்திய பிரதமர் இந்த நிகழ்ச்சியில் வாழ்த்து சொல்ல உள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் நேரில் சந்திக்கும் போது வலியுறுத்தினார். பிரதமர், சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நன்றியை தெரிவித்து க் கொ ள்ள விரும்பிகிறேன். பல நாடுகள் இருந்தாலும் இலங்கை என்பது தொப்புல் கொடி உறவு சொந்தம். இந்த தொப்புல் கொடி சொந்தத்திற்கும் எங்களுக்கும் ஒரு இணைப்பை உருவாக்க இந்த போக்குவரத்து என்பது மிக சவுகரியமாக இருக்கும். இந்தியா, இலங்கைக்கு இடையே தொடங்கப்பட்டுள்ள இந்த கப்பலில் 150 பேர் பயணிக்கலாம். இன்று 50 பேர் பதிவு செய்து கப்பலில் பயணிக்கிறார்கள். இந்த கப்பலுக்கு கட்டணம் என்று எடுத்து சொன்னால் ரூ. 7,600 என்று நிர்ணயம் செய்துள்ளார்கள்.*

**ஆண்டு முழுவதும் இயக்க வேண்டும்!**

*ஒன்றிய அமைச்சரை கேட்டுக் கொள்வது இந்த பயணம் என்பது இங்கிருந்து முதன் முதலாக தொடங்க உள்ளது. சுற்றுலா துறை மூலமா, அல்லது சம்பந்தப்பட்ட துறை மூலமாக ஒரு 50 சதவீதம் மானியமாக வழங்கினால் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு செல்ல வாய்ப்புகள் இருக்கும். முதல் முதலாக தொடங்கும் போது விமானத்தின் கட்டணத்தை ஒப்பிட்டு பாக்கிறார்கள். இந்த பகுதியில் பெரும்பான்மையானவர்கள் விவசாய பெருங்குடி மக்கள் இருக்கின்றனர். ஒன்றிய அரசாங்கம் 50 சதவீதம் மானியம் தந்தால் மிக சிறப்பாக இருக்கும் என்று ஒன்றிய அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக சீசனில் ஓடும் அளவிற்கு இந்த கப்பல் உள்ளது. ஆண்டு முழுவதும் கப்பல் இயக்க வேண்டும் என்றால் பெரிய கப்பல் தேவை. சிப்பிங் கார்பரேசன் ஒன்றிய அமைச்சரான உங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. வரும் ஜனவரி மாதத்தில் இருந்து ஆண்டு முழுவதும் ஓடுகின்ற ஒரு கப்பலை நீங்கள் தரவேண்டும் என்று ஒன்றிய அரசை கேட்டுக்கொள்கிறேன்.*

*மீண்டும் மீண்டும் தமிழ்நாடு அரசின் சார்பிலும், தமிழ்நாடு முதலமைச்சர் சார்பிலும் நன்றியை சொல்ல விரும்புவது எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, நாங்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக மக்களின் பிரச்சனை தீர்ப்பதற்காக முன் வந்து எங்களோடு இணைந்து இந்த கப்பலை விட ஒன்றிய அமைச்சர் சர்பனந்த பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். எனவே அவருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியை சொல்லி இன்று தொடங்கப்பட்டுள்ள இந்த கப்பலில் முதலில் பயணிக்கின்ற பயணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.*

*நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேக நாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா. மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா. குமார், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், சட்ட மன்ற உறுப்பினர்கள் நாகைமாலி, முகமதுஷனவாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. தலைமை!

# தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் எஸ்.எல்.சிவக்குமார் அறிக்கை!

*தஞ்சாவூர் அக்.15-*

*தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணியின் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் பட்டுக்கோட்டையில் நடைபெற உள்ளது. இலக்கி அணி நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் மாவட்ட அமைப்பாளர் எஸ்.எல். சிவக்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் : வருகின்ற 18.10.2023 புதன் கிழமை மாலை 04.00 மணியளவில் பட்டுக்கோட்டை, வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள, தஞ்சை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட இலக்கிய அணியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.*

*அதுசமயம் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் அணிகளின் நிர்வாகிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.*

*கூட்டத்தின் பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா. கழக வளர்ச்சி பணிகள்.*

*இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க இலக்கிய அணி அமைப்பாளர் எஸ்.எல். சிவக்குமார் அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் முன்னாள் முதல்வர்

# அருட்தந்தை முனைவர் ஜான்பிரிட்டோ மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 15-

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் முன்னாள் முதல்வர் அருட்தந்தை முனைவர் ஜான் பிரிட்டோ அவர்களின் மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியின் முன்னாள் அதிபரும், முதல்வரும், செயலாளருமான அருட்தந்தை முனைவர் ஜான் பிரிட்டோ அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் மனம் வருந்தினேன்.

தாவரவியல் வல்லுநரான அருட்தந்தை ஜான் பிரிட்டோ அவர்கள், ஏழை, எளிய மாணவர்கள் பலரும் உயர்கல்வி பெற உதவி, அவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறவும் உறுதுணையாக இருந்துள்ளார்.

அவரது பிரிவால் வாடும் ஜெயின்ட் ஜோசப் கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



காரைக்கால் மாநில தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் இஸ்லாமிய கைதிகள் விடுதலை குறித்து தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆற்றிய உரை முரசொலியில் வெளியானதை துண்டு பிரச்சாரமாக காரைக்கால் மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து பள்ளிவாசலிலும் தொழுகை முடிந்து வரும் இஸ்லாமிய மக்களிடம் மாநில கழக அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது மாநிலக் கழக நிர்வாகிகளும் தொகுதி கழக நிர்வாகிகளும் மற்றும் ஏராளமான இஸ்லாமியர்களும் கலந்து கொண்டனர்.



சென்னையில் நடைபெறவுள்ள மகளிர் உரிமை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி ஆகியோரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை விமான நிலையத்தில், புத்தகம் வழங்கி வரவேற்றார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தயாநிதிமாறன் எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ்.அழகிரி ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ள மட்டும்

# சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவு கூரப்படுவார்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, அக். 15–

தியாகி சங்கரலிங்கனார் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ள மட்டும் சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவு கூரப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**அக்டோபர் 13: விருதுநகர் சங்கரலிங்கனார் நினைவுநாள்!**

**“வீரத்தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை, தியாகச் சுபாவத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். தியாகிக்குத் தலை வணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்!” என்றார் பேரறிஞர் அண்ணா!**

**தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ளமட்டும் சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவுகூரப்படுவார்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியாவில் நடைபெறும்

# பொதுத் தேர்தல்களில் நடுநிலையுடன் செயல்பட வேண்டும்!

### முகநூல், கூகுள் நிறுவனங்களுக்கு ‘இண்டியா’ கூட்டணித் தலைவர்கள் கடிதம்!

புதுடெல்லி, அக். 15 –

இந்தியாவில் விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களில் நடுநிலையுடன் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேஸ்புக் மற்றும் கூகுள் நிறுவனங்களுக்கு இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணி செய்தித் தாளான வாஷிங்டன் போஸ்ட், சமூகவலைதளங்களான பேஸ்புக், வாட்ஸ் அப் மற்றும் யூ டியுப் ஆகியவை ஒன்றியத்தில் ஆளும் மோடி அரசுக்கும், பாஜகவுக்கும் ஆதரவாக பாகுபாடுடன் செயல்படுவதாக செய்தி வெளியிட்டிருந்தது.

இதை சுட்டிக்காட்டி, பேஸ்புக் தலைமை செயலதிகாரி மார்க் ஜுகர்பெர்க், கூகுள் தலைமை செயலதிகாரி சுந்தர் பிச்சை ஆகியோருக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட 28 கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணி கடிதம் எழுதியுள்ளது.

அந்த கடிதத்தில், இந்தியா கூட்டணியானது 28 எதிர்க்கட்சிகளை கொண்ட கூட்டணி என்றும், 11 மாநிலங்களில் இக்கூட்டணி ஆட்சியில் உள்ளதென்றும், ஒட்டுமொத்த இந்திய வாக்காளர்களில் ஏறத்தாழ 50 சதவீதம் பேரின் வாக்குகளை இக்கூட்டணி பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மதவாத வெறுப்புணர்வை தூண்டும் பாஜகவின் பிரச்சாரத்துக்கும், சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைக்கும் Meta நிறுவனத்தின் வாட்ஸ் அப், பேஸ்புக் ஆகியவை துணை போவதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை விரிவாக விசாரணை நடத்தி செய்தி வெளியிட்டிருப்பதாகவும், வாட்ஸ் அப், பேஸ்புக் ஆகியவற்றில் ஆளும் கட்சியினரின் கருத்துகள் ஊக்குவிக்கப்படும் வேளையில், எதிர்க்கட்சிகளின் கருத்துகள் நீக்கப்படுவதோடு, முடக்கம் செய்யப்படுவதாகவும், இதுதொடர்பான தரவுகள் தங்களிடம் இருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோல வெளிநாட்டை சேர்ந்த தனியார் நிறுவனமானது குறிப்பிட்ட ஒரு அரசியல் அணிக்கு எதிராக அப்பட்டமாக பாகுபாடு காட்டுவது, இந்திய ஜனநாயகத்தில் தலையிடும் செயல் என்றும், இதை இந்தியா கூட்டணி எளிதான விஷயமாக எடுத்துக் கொள்ளாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யூ டியுப் தளத்தை பயன்படுத்தி பா.ஜ.க.வினரும், பா.ஜ.க. ஆதரவாளர்களும் இழிவான வகுப்புவாத பிரிவினைப் பிரச்சாரத்தை மேற்கொண்டிருப்பதாக குற்றம் சாட்டியுள்ள இந்தியா கூட்டணி, இந்த விவகாரத்தை தீவிரமான பிரச்சினையாக கருதி, 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களில் சமூகவலைதளங்கள் இந்தியாவில் நடுநிலையுடன் செயல்படுவதையும், இந்தியாவில் சமூக அமைதியின்மையை ஏற்படுத்தவோ அல்லது இந்திய ஜனநாயக கோட்பாடுகளை சிதைப்பதற்கோ பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டுமென்று கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### புவியியல் – சுரங்கத்துறையைச் சார்ந்த

# அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம்!

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.15-

புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சார்ந்த அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்து ஆய்வுக் கூட்டம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.10.2023) நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்து துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை க.பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் திருமதி. பூஜா குல்கர்னி மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையில் கனிம வருவாய் ரூ.817.40 கோடி ஈட்டப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி இனி வரும் மாதங்களில் அதிக வருவாயினை ஈட்டிடவும் மாவட்ட வாரியாக கனிம வருவாய் விபரங்களை கேட்டறிந்த அமைச்சர் அவர்கள் கனிம வருவாயை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தர அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், மாவட்ட மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், சட்டவிரோத கனிமங்களை வெட்டி எடுப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப்பகுதிகளை கள ஆய்வு மேற்கொண்டு, விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கினார்கள். மேலும் நிலுவையிலுள்ள வருவாய் இனங்களில் கவனம் செலுத்தி நிலுவை தொகையினை விரைந்து வசூலிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள தகுதிவாய்ந்த கிரானைட் குவாரிகளை உடனே பொது ஏலத்திற்கு கொண்டுவருமாறும், அரசுக்கு மேலும் வருவாய் சேர்க்கவும், அமைச்சர் அவர்கள் மாவட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் அனைத்து மாவட்டங்களில் உள்ள தகுதி வாய்ந்த கல்குவாரிகளை ஏலத்திற்கு கொண்டு வருமாறும், நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு குத்தகை உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், கனிம வருவாயினை ஈட்டவும், அனைத்து அலுவலர்களையும் கேட்டுக்கொண்டார். வாகனம் கைப்பற்றுகையை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட அலுவலர்களும் குறைந்தபட்சம் மாதத்திற்கு 20 வாகனங்கள் கைப்பற்றிடவும் அனுமதியின்றி செயல்பட்ட குவாரிகள் மேல் கனிம விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் மண்டல பறக்கும் படையினர் முனைப்புடன் செயல்பட்டு அதிக அளவில் வாகனங்களை கைப்பற்றி கனிம திருட்டினை முற்றிலும் தடுத்து மாநில அரசுக்கு அதிக அளவில் வருவாய் ஈட்டித் தருமாறும் கேட்டுக் கொண்டார்.

### 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ.31.30 கோடி மதிப்பிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

### இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை!

சென்னை, அக்.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப்பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் கரூர், ஈரோடு மற்றும் திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 3 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.31.30 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம், கரூர், அருள்மிகு கல்யாண பசுபதீசுவர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தோரணக்கல்பட்டியில் அமைந்துள்ள 7 ஏக்கர் 51 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. கரூர் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்ற உத்தரவின்படி, கரூர் மாவட்ட உதவி ஆணையர் திருமதி பி.ஜெயதேவி அவர்களின் முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய மதிப்பு ரூ. 22 கோடியாகும்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திருவாச்சி அருள்மிகு கரிய பெருமாள் கரிய காளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 2.46 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்ததையடுத்து ஈரோடு மண்டல இணை ஆணையர் உத்தரவின்படி, காவல்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.7.60 கோடியாகும்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருவாஞ்சியம் கிராமம், அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான 16 ஏக்கர் 82 சென்ட் நிலத்தினை 14 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். இந்நிலத்தினை நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வே.குமரேசன் அவர்கள் தலைமையில், திருவாரூர் உதவி ஆணையர் (கூ.பொ) திருமதி ப.இராணி அவர்கள் முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.1.70 கோடியாகும்.

ஆகமொத்தம் இன்றைய தினம் மீட்கப்பட்ட 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் மதிப்பு ரூ.31.30 கோடியாகும்.

இந்நிகழ்வுகளில் திருக்கோயில் செயல் அலுவலர்கள் எல். சரவணன், பி.எஸ்.ராஜா, மற்றும் சிறப்பு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில்

# ரூ.371 கோடி மதிப்பில் 1666 அடிச்சட்டங்கள் கொள்முதல்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!



சென்னை, அக்.15-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் பயணிகளின் பேருந்து சேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 1666 அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு :

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி ரூ.371.16 கோடி மதிப்பீட்டில் 1666 புதிய பேருந்துகளின் அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு (விழுப்புரம்-344, சேலம்84, கோயம்புத்தூர்263, கும்பகோணம்367, மதுரை350, திருநெல்வேலி242) என மொத்தமாக நகர மற்றும் புறநகர் பேருந்து சேவைகளுக்காக 1650 அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கும், மலைவாழ் மக்களின் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் (கோயம்புத்தூர்) கழகத்திற்கு பிரத்யேகமான 16 அடிச்சட்டங்களும் ஆக மொத்தமாக 1666 அடிச்சட்டங்கள் கொள்முதல் செய்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் மூலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களின் மூலமாக வழங்கப்படும் பொதுப் பேருந்து சேவைகள் நாட்டில் முதன்மையான நிலைக்கு உயர்ந்திடும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




நாகை மாவட்டம் நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு 40 ஆண்டுகளுக்கு பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் நேற்று முன்தினம் கப்பல் (படகு) போக்குவரத்து தொடங்கியது. நாகை துறைமுகத்தில் நடைபெற்ற விழாவில் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு , சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துணை அமைச்சர் சர்பானந்தாசோனாவால், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் கொடி அசைத்து வைத்து கப்பல் போக்குவரத்தை தொடங்கி வைத்தார்கள்.

### தமிழ்நாட்டிற்கு காவிரியில் இருந்து

# வினாடிக்கு 16 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்க வேண்டும்!

### காவிரி மேலாண்மை ஆணையத்திடம் தமிழ்நாடு வலியுறுத்தல்!

சென்னை, அக். 15-

நேற்று முன்தினம் (13.10.2023) புதுதில்லியில் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 26வது கூட்டம் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவேரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர்.சுப்பிரமணியம், உறுப்பினர் எல்.பட்டாபி ராமன், உதவி செயற்பொறியாளர் திருமதி ரம்யா மற்றும் கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய பிற மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 26 வது கூட்டம் நேற்று முன்தினம் (13.10.2023) காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவேரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர். சுப்பிரமணியம், உறுப்பினர் எல்.பட்டாபி ராமன், உ உதவி செயற்பொறியாளர் திருமதி ரம்யா மற்றும் கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய பிற மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சார்பாக பில்லிகுண்டுலிருந்து கர்நாடகா வினாடிக்கு 16,000 கனஅடி தண்ணீர் திறந்துவிட வேண்டுமென காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் வரும் அக்டோபர் 16ம் தேதி முதல் 15 நாட்களுக்கு தமிழகத்திற்கு காவேரியில் வினாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்க கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

# கலைஞரும் நானும் 40

“50 ஆண்டுகள் தி.மு.க.வின் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதல்வராகவும் கடமையாற்றினாலும், பத்திரிகையாளராக கலைஞரின் உழைப்புத் திறன் ஈடு இணையற்றது. ஊடகத் தம்பிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது! நான் கற்றுக்கொண்டு செயல்படுத்திய பாடமும் அதுவே...” என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் மூத்த பத்திரிகையாளர் ‘தராசு’ ஷ்யாம்.

■ ‘தராசு’ ஷ்யாம்,
மூத்த பத்திரிகையாளர்



## மாற்றங்களை வரவேற்ற தலைவர்!

“பத்திரிகையாளனாகப் பல தலைவர்களோடு பழக, காலம் எனக்கு வாய்ப்பு வழங்கியது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அத்தகைய தலைவர்களில் கலைஞருக்குத் தனி இடம் உண்டு. கலைஞரை நான் முதன்முதலில் காணக் கிடைத்தது பள்ளி இறுதிவரை பயின்ற சாத்தான்குளத்துக்கு (இன்றைய தூத்துக்குடி மாவட்டம்) அவர் வருகை தந்தபோதுதான்.

மின்னல் வேகத்தில் மாலைகளைப் பெற்றுக்கொண்டு எதுவும் பேசாமல் கிளம்பிவிட்டார். ஊரிலிருந்த ஒரு கொட்டகையில் கலைஞர் பேசப் போவதாகவும் அங்கு காத்திருக்கும்படியும் கூறினார்கள். அங்கு சென்ற பிறகுதான் தெரிந்தது, அப்படி ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடே செய்யப்பட வில்லை என்பது.

“இரண்டு, மூணு பசங்க சைக்கிள்ல போய் பிடிங்க. போகும்போது ‘முரசொலி’ பத்திரிகையைக் கையில எடுத்துக்கிட்டு உசத்திக் காட்டுங்க. காரை நிறுத்தச் சொல்லுவாரு!” அண்ணாச்சி ஒருவர் கொடுத்த ஐடியா வேலை செய்தது. இளைஞர்கள் சிலர் கைகளில் ‘முரசொலி’யை எடுத்து ஆட்டிக்கொண்டு வருவதைப் பார்த்த கலைஞர் வண்டியை நிறுத்திப் பேசினார். அவரது மூத்த பிள்ளை ‘முரசொலி’ அல்லவா?

### தலைவரின் தஞ்சைக் குறும்பு

கலைஞரை தி.மு.க. தலைவராகவோ, தமிழ்நாட்டு முதல்வராகவோ பார்ப்பதை விட, பத்திரிகையாள ராகவோ எழுத்தாளராகவோ, பார்ப்பதில் எப்போதும் எனக்குப் பேரானந்தம். பள்ளிப் பருவத்தில் அண்ணாந்து பார்த்த அருமைக் கலைஞரை அடுத்த 25 ஆண்டுகளில் பத்திரிகையாள னாக நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

1988-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி, அவரது பிறந்த நாள் அன்று சால்வை அணிவித்துவிட்டு வாழ்த்துக் கூறியபோது,

“என்னய்யா..என்ன நடக்குது!” எனக் கேட்டார். நான் ஜாக்கிரதையாக பதில் கூறுவதாக நினைத்துக்கொண்டு, “அண்ணே..உங்களுக்குத் தெரியாததா?” என்றேன். சட்டென்று அவரிடமிருந்து “தெரியாததால் தான்யா கேட்கிறேன்!” என தஞ்சை மண்ணுக்கே உரித்தான இயல்பான குறும்பு வந்து விழுந்தது.

### தட்டிக் கொடுத்த அனுமதி

1995-ஆம் ஆண்டு, மூத்த பத்திரிகையாளர் மறைந்த ரவீந்திரதாஸ் மகள் டாக்டர் அஜிதா திருமணம். கலைஞர் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். நான், வேறு ஓர் அவசரப் பணி காரணமாக பாதியில் செல்ல வேண்டிய நிலை. மேடையில் அவருடன் இருந்த நான், அவரிடம் சொல்லிக்கொண்டு அனுமதி பெற்றுப் போக எண்ணி அருகில் சென்றேன். வாஞ்சையுடன் முதுகில் தட்டிக்கொடுத்து அனுப்பினார்.

மிகவும் மூத்த தலைவர். ஆனாலும், அவருக்கு முன்பே புறப்படுவதைப் பொருட்படுத்த வில்லை. திருமண விழாவுக்கு வந்திருந்த கட்சிப் பிரமுகர்களும், மற்றவர்களும் சங்கடப்படக் கூடாது என்பதற்காக, அவர் காட்டிய நல்லெண்ண சைகையே அந்தத் தட்டல் என்பதைப் பின்னர் புரிந்துகொண்டேன்.

> பெரும்பாலும் நான் அவரைத் தனித்து சந்தித்தது எல்லாம் காலை நான்கரை அல்லது ஐந்து மணிக்குத்தான். அப்போதே எல்லா பத்திரிகைகளையும் படித்து முடித்துத் தயாராக இருப்பார்.

### அதிகாலை நேர தயார்நிலை

கலைஞரிடமிருந்து இன்றைய இளையதலைமுறை கற்க வேண்டிய பாடம், அவரது கடின உழைப்பு. பெரும்பாலும் நான் அவரைத் தனித்து சந்தித்தது எல்லாம் காலை நான்கரை அல்லது ஐந்து மணிக்குத்தான். அப்போதே எல்லா பத்திரிகைகளையும் படித்து முடித்துத் தயாராக இருப்பார். நம்மிடம் கேட்பதற்குத் தோதான கேள்விகளையும் மனதில் தயார் செய்து வைத்திருப்பார்.

கலைஞரின் நினைவாற்றல் அபாரமானது. ஏதாவது மாற்றிச் சொல்லிவிட்டால், “அன்று அவ்வாறு சொன்னாயே?” என்று ஞாபகமாகக் கேட்டுவிடுவார். அதேபோல் ஏதாவது புதிய விஷயங்களை எழுதினால், “என்ன ஆதாரம்?” என்று தொலைபேசியிலேயே கேட்பார்.

### பிழை பொறுக்காத ஆசிரியர்

கலைஞர் தலைமையில் சென்னையில் பொதுக்கூட்டம். பேசும்போது பிழையாக கவிஞர் பெயரை மாற்றிக் கூறிவிட்டேன். உடனே கலைஞர் குறுக்கிட்டுத் திருத்தினார். முடிந்ததும், “பிழை யான தகவல் போய் சேர்ந்து விடக் கூடாது!” என்று மென்மையாக என்னையும் சமாதானப்படுத்தினார்.

கலைஞரைத் தாக்கியும் எழுதி இருக்கிறேன். போற்றியும் எழுதி இருக்கிறேன். இரண்டையும் அவர் சமமாகப் பார்த்தார். ‘தாக்குதல், தனிப்பட்ட வகையில் தன் மீதானது அல்ல. நிர்வாகத்தின் குறைபாடுகளால் விளைந்தது’ என்பதை அவர் நன்கு புரிந்து வைத்திருந்தார்.

### நேரடி செய்திகள் தந்தவர்

நவோதயா பள்ளிகளை நிறுவ, 1986-இல் ஒன்றிய அரசு திட்டம் கொண்டு வந்தது. அவற்றில் இந்தி கற்பது கட்டாயம். தி.மு.க. அதை எதிர்த்தது. நவம்பர் 17-ஆம் தேதி டெல்லியில் அரசின் கல்விக் கொள்கைக்கு எதிராக, அரசியலமைப்பின் 17-வது பகுதியை எரித்துப் போராட்டம் நடத்தியது. கலைஞர் உட்பட 20,000 க்கு மேற்பட்ட தி.மு.க. தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். பரபரப்பாக ‘தராசு’ இதழில் எழுதி வந்தேன்.

இந்திய அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்திய காரணத்தால் பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்ட 10 தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கத் தகுதி அற்றவர்கள் என்று அவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள்.

அப்போது கலைஞர் மேலவை உறுப்பினர். சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தை விளக்கி, அவர் பேசியும் எழுதியும் வந்தார். பல செய்திகளை நேரடியாக அவரிடமிருந்தே கேட்டுத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எங்கள் பாட்டனின் ஊரான பட்டுக்கோட்டை அருகில் நாடியம் மற்றும் மருங்கப்பள்ளம் என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. 2010 கால கட்டத்தில் அங்கு நான் வேளாண்மை பார்க்கச் சென்றுவிட்டேன்.

அந்த ஊரில் தங்கித்தான் 1957-இல், ’புதையல்’ படத்துக்குக் கதை, வசனம் எழுதியிருக்கிறார் கலைஞர். அதை அறிந்து அவர் தங்கி இருந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடித்தேன். ஊரின் சிவன் கோவில் அருகே அவர் நடைப்பயிற்சி சென்றதைப் பற்றியும் ஒரு பெரியவர் நினைவு கூர்ந்தார்.

### மாற்றத்தின் நண்பர்

1989-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன் அடுத்த முதல்வர் கலைஞர்தான் என்று கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு வந்தேன். **‘வாக்காளர் சர்வே’** என்பதே அன்றைய காலகட்டத்துக்குப் புதிய முயற்சி. எனவே கலைஞர் ஆர்வத்தோடு கருத்துக் கணிப்பு முறைகளையும், அதற்கான மாதிரி வினாத்தாளையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். புதிய மாறுதலை எதிர்க்கும் மனோபாவம் (RESISTANCE TO CHANGE) கலைஞருக்கு என்றும் கிடையாது.

மிக மூத்த அகவையில் கலைஞர் கணினி கற்றுக் கொண்டார். அகர முதல என்று தமிழில் டைப் செய்து அந்த எழுத்துகள் கணினித் திரையில் தோன்றியதை அவர் குழந்தையைப் போல் ரசித்தார் என்று சொல்வார்கள். அவர் தன்னைத் தானே ‘அப்டேட்’ செய்துகொண்டே வந்தார்.

முதல்வராக இருந்தால், கோப்புகளைப் பார்ப்பார், எழுதுவார். முதல்வராக இல்லாவிட்டால், நூல்களைப் படிப்பார், ‘முரசொலி’க்கு எழுதுவார். இதுதான் நான் கண்ட கலைஞர். அவர் மறைந்த போது எழுதினேன், “கலைஞர் எழுதுவதை நிறுத்திக்கொண்டார்” என்று. ஆனால், அவர் எழுதியவற்றை தமிழ் பத்திரிகையுலகம் என்றும் மறக்காது.

...பகிர்வார்கள்

## யார் முகத்தில் கரி?

வெளிநாடுகளில் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யும்போது, சந்தை மதிப்பைவிட பல மடங்கு விலை வைத்து, இறக்குமதி செய்து அதை இந்தியாவில் பல மடங்கு விலையில் விற்பனை செய்து கொழுத்த லாபத்தைப் பார்த்து வருகிறது, அதானி குழுமம். இதன் காரணமாக, மின் கட்டணம் உயர்ந்து, மக்கள் அவதியுறுகிறார்கள் என்று 2016-ஆம் ஆண்டே அந்தக் குழுமத்தின் மீது குற்றம்சாட்டப்பட்டது. அதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தோற்றுப் போய், அதானி குழுமத்தின் மீது எந்தத் தவறும் இல்லை என்று சொல்லப்பட்டது.

இந்நிலையில், இலண்டனிலிருந்து வெளிவரும் ‘ஃபினான்ஷியல் டைம்ஸ்’ எனும் நாளிதழ் கடந்த சில நாட்களுக்கு முன்பு அதானி குழுமம் குறித்து அதிர்ச்சி கரமான தகவலை வெளியிட்டுள்ளது.

அதாவது, அந்த நிறுவனம் இந்தோனேஷியாவில் கிடைக்கும் நிலக்கரியை தைவான், துபாய், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள பரவலாக அறியப்படாத சில இடைத்தரகு நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்துள்ளது. அதனால் இந்தோனேஷியாவில் 139 மில்லியன் டாலருக்கு வாங்கிய நிலக்கரியை, இந்தியாவுக்கு வரும்போது 215 மில்லியன் டாலராகக் காட்டியிருக்கிறது.

கேள்வி என்னவென்றால், நிலக்கரியை நேரடியாக வாங்காமல், இடைத்தரகர்கள் மூலமாக ஏன் வாங்க வேண்டும் என்பது தான். நிலக்கரி கைமாற்றப்பட்ட அந்தக் காலகட்டத்தில் அந்த இடைத்தரகு நிறுவனங்களும் அதிக அளவில் லாபம் பார்த்திருக்கின்றன. எனில், அவை அதானி குழுமத்தின் பினாமி நிறுவனங்களா என்று கேள்வி எழுந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### வீட்டுக்கு வந்த வாழ்த்து!

1958-ஆம் ஆண்டு ஜூலை 5 அன்று என் தந்தை மற்றும் சித்தப்பா ஆகியோரின் திருமணம் **‘இசைமுரசு’ நாகூர் ஹனிபா** அவர்களின் இசைக் கச்சேரியுடன் ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், பெரியகுளத்தில் நடைபெற்றது. திருமணத்துக்கு வருகை தர முடியாத காரணத்தால் அதற்கடுத்த வாரம் தலைவர் கலைஞர் வருகை தந்து இருவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து, மதிய உணவையும் வீட்டிலேயே உட்கொண்டார். சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாக இயங்கி, தி.மு.க.விலும் தளராமல் பணியாற்றிக் கொண்டிருந்த என் தாத்தாக்கள் மளுக்கர் மேத்தர், சின்ன மளுக்கர் ஆகியோர் தலைவர் கலைஞரின் அருகில் அமர்ந்துள்ளனர். இன்றைக்கு பெரியகுளம் பகுதியில் அமைந்திருக்கும் ஆடுபாலத்துக்கும் அப்போது கலைஞர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டதாக என் தந்தை கூறியுள்ளார். மிக இளம் வயதில் தலைவர் கலைஞரை இதில் பார்க்க முடியும்.



அப்துல் சித்திக்

**-எம்.அப்துல் சித்திக்,**
**புகைப்படக் கலைஞர், பெரியகுளம்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆங்கிலம் அலுவல் மொழி

**1958-இல் நடைபெற்ற அகில இந்திய அலுவல் மொழி மாநாட்டில், ஆங்கிலத்தை ஒன்றிய அலுவல் மொழியாக்கிட வலியுறுத்திய பெரியார், வட இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து சாதி அமைப்பைக் கடுமையாகக் கண்டித்தார். சென்னையில் நடைபெற்ற தனது கடைசிக் கூட்டத்தில் கூட சமத்துவத்தையும் சமூக நீதியையும் வலியுறுத்தினார் பெரியார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 270




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131